
சகோ.ராஜசேகரம்



# விழயற்காலத்து வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியற்காலத்து வெளிச்சம்

சகோ.ராஜசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு அல்ல**
(Not For Sale)

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | விடியற்காலத்து வெளிச்சம்<br>(நூல் வரிசை – 3) |
| ஆசிரியர் | : | சகோ.ராஜசேகரம் |
| பக்கங்கள் | : | 68 |
| அளவு | : | A5 |
| பிரதிகள் | : | 500 |
| வெளியீடு | : | ஜூன் 2018 |
| அட்டை வடிவமைப்பு | : | சு.நிர்மலவாசன் |
| கணனி வடிவமைப்பு | : | வணசிங்க பிரிண்டர்ஸ்,<br>திருமலைவீதி, மட்டக்களப்பு.<br>தொ.பே: 0652227170. |
| தொடர்புகளுக்கு | : | Bro Maharishi (ராஜசேகரம்)<br>HOFSTEDE - 162<br>8212 WL<br>LELYSTAD<br>NEDERLAND.<br>T.P : 0031 320 227445<br>0031 622 728717 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
மரண இருளின்
பாதையை
விடியற்காலத்து
வெளிச்சமாக்கியவருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே ....


1. பெரும்பாடுள்ள ஸ்திரியின் இரகசியம்
2. விருத்த சேதனத்தின் இரகசியம்
3. மாராவின் இரகசியம்
4. சர்ப்பத்தின் இரகசியம்
5. நீதிமான்களின் இரகசியம்
6. தர்க்கத்தின் இரகசியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# பெரும்பாடுள்ள ஸ்திரியின் இரகசியம்

பெரும்பாடுள்ள ஸ்திரியின் சுகமாக்குதலைப் பகுத்தறிந்து கொள்ளுவதற்காக இவ்வேதப்பகுதியானது படிகளைப்போல பிரித்தமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இவ்வேதாகமப் பகுதிக்குள் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குலைக்கும் நோக்கில் **பலசந்தேகங்களை உண்டாக்கும் காற்றுக்கள்** மோதித்தள்ளுவதற்காக முயற்சிக்கின்றன.

எனவே நம்மைநிலைகுலையச் செய்யவும், விசுவாசத்தை இடம்பெயர்த்தவும் பிரயாசப்படும் இக்காரியங்களில் தெளிவுறவும், நிலைத்திருக்கவும் வேண்டியது அவசியமாகின்றது.

## I

(1) பெயர்சொல்லப்படாத ஸ்திரியின் சுகமாக்குதலை மூன்று சுவிஷேச நூல்களிலும் காணலாம். (மத்தேயு *9:20-22*) (மாற்கு *5:25-34*) (லூக்கா *8:43-48*) இதுவே இச்சம்பவத்திற்குள் இருக்கும் **சத்தியத்தை** நாம் கண்டுகொள்ள வேண்டும் என்ற உணர்வினை நமக்குள் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பன்னிரண்டு வருடமாய் பெரும்பாடுள்ளவளாய் இருந்தவள்

- வைத்தியர்களுக்கு **ஆஸ்திகளைச் செலவழித்தவள்**
- **ஒருவராலும்** சுகப்படுத்தமுடியவில்லை
- **தானாகவும்** சுகமாகவில்லை

**வைத்தியனாகிய லூக்காவே** இதனைப்பதிவு செய்துள்ளார் என்பதன் மூலம்,

❖ **மனுஷரால் கூடாதது தேவனால் எல்லாம் கூடும்** என்பதன் இன்னொருசாட்சி,

(3) இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டவள் தனக்கும் சுகம் கிடைக்கும் என்று எண்ணினாள். (மாற்கு 5:27)

- அதை விசுவாசித்தாள் (ஆத்துமாவின்) - (மத்தேயு 9:21) (மாற்கு 5:27)
- அதை செயற்படுத்தினாள் (கிரியையில்) - (மாற்கு 5:28) (லூக்கா 8:44)
- அதை அறிக்கையிட்டாள் (ஆவியில்) - (மாற்கு 5:27) (லூக்கா 8:47)

ஆகிய இம்மூன்று காரியங்களின் மூலம்,

- **ஆத்துமாவில்** : வஸ்திரத்தை தொட்டால் சுகமாவேன் என்ற எண்ணம் (மத்தேயு 9:20-22)
- **ஆவியில்** : வஸ்திரத்தை தொட்டு சுகமானேன் என்ற அறிக்கை (மாற்கு 5:25)
- **சரீரத்தில்** : வஸ்திரத்தை தொட்டு சுகம்பெற்ற கிரியை (மாற்கு 5:28-34)

ஆகிய பெரும்பாடுள்ள ஸ்திரியின் சுகமாக்குதலுக்குள் அவளுடைய ஆவி - ஆத்துமா - சரீரம் தொடர்புள்ளதைக் காணலாம்.

❖ **ஆவி - ஆத்துமா - சரீரத்தில் கீழ்ப்படியும் போதும் அற்புதம் நடக்கும்** என்பதன் இன்னொரு சாட்சி.

(4) **உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது** என்று சாட்சி பெற்றாள். (மத்தேயு 9:22) (மாற்கு 5:34) (லூக்கா 8:48)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **விசுவாசத்தினால் ஜெயம் பெறலாம்** என்பதன் இன்னொரு சாட்சி.

(5) **மகளே! சமாதானத்தோடே போ** என்று ஆசீர்வதிக்கப்பட்டாள் (மாற்கு 5:34) (லூக்கா 8:48)

❖ **தேவசமாதானம் இருதயத்தில் நிறைந்தவள்** என்பதன் இன்னொரு சாட்சி.

ஏனெனில் இயேசுகிறிஸ்துவே **சமாதானத்தின் தேவன்** ஆவார்

## II

(அ) **பெரும்பாடுள்ளவள்** என்பது **தீட்டானவள்** (லேவி 15:25) என்பது பிரமாணம்.

- ஆகவே, இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டவள் **அவருக்குப்பின்னாக வந்து தொட்டாள் என்பதன் காரணம் இதுவேயாகும்.**

- **தீட்டானவள்** தொட்ட **பொருட்களும் தீட்டாகும் :**
  **தீட்டானவளைத் தொட்டவனும் தீட்டாயிருப்பான்** என்பது பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் ஆகும். (லேவி 15:23-24)

- **இயேசுவைத்தொட்டபோதோ, தீட்டானவள் சுகம் பெற்றாள்** என்பது புதிய ஏற்பாட்டின் பிரமாணம்.
  **இது கிறிஸ்துவின் பிரமாணம்.**

(ஆ) இயேசு **என்னைத் தொட்டது யார்?** என்று கேட்டார். (லூக்கா 8:45)

மனிதருடைய உள்ளங்களை அறிகின்றவர் (லூக்கா 5:22) (லூக்கா 9:47) (லூக்கா 11:17)

**தன்னைத் தொட்டது யாரென்று அறியாதிருப்பாரோ?**

என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்போதுதான் இச்சம்பவத்தினுள் மறைந்திருக்கும் ஆழமான மறைபொருள் என்ன என்று ஆராயவேண்டிய அறிவு உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) இங்கு நடைபெற்ற சுகமாக்குதல் என்பது வெளிப்படையாக கண்டுகொள்ளக் கூடிய **வெளியரங்கமான காரியம் அல்ல** என்ற உண்மைபுரியும்.

ஆகவே, மற்றவர்கள் அறியாத **அந்தரங்கங்களும் அல்லது மறைவான வைகளும்** இயேசுகிறிஸ்துவுக்குள் சுகமாவதை உணர்த்துவதற்காகவே

- **என்னைத் தொட்டது யார் என்றுகேட்டார்.**

(ii) **சுகம்பெற்றவள்** சுகத்தை அறிவித்தால் **அதுசாட்சி.**
**நான் சுகமாக்கினேன்** என்று சொன்னால் **அதுபெருமை.**

ஆகவே, மறைவானகாரியத்தில் சுகம் பெற்றவளே சாட்சி சொல்ல வேண்டும் என்பதாக,

- **என்னைத் தொட்டது யார் என்று கேட்டார்.**

(iii) **வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்** என்பது
**தன்னைத் தொட்டாள்** என்பதற்குச் சமமானது என்ற சத்தியத்தை உணர்த்துவதற்காக

- **என்னைத் தொட்டது யார் என்று கேட்டார்**

**வஸ்திரத்தின் ஓரம்** என்பது என்னவென்று கண்டுகொள்ளும்போதே, **என்னைத் தொட்டது யார்** என்று கேட்டதின் **தெய்வீக இரகசியத்தை** அறியலாம்.

(இயேசுகிறிஸ்துவுடைய தெய்வீக வல்லமையை மறைவாய் அனுபவிப்பவர்கள் உண்டு என்பதை உணர்த்தும் இச்சம்பவம் போல,
இன்றும் இத்தகையோர் மறைந்துள்ளார்கள் வெளியே வருவதற்குத் தடையாக சூழல் அமைந்துள்ளது.
**இவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டியது** நமது கடமையாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

(அ) பெரும்பாடுள்ள ஸ்திரி வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.
(மத்தேயு 9:21) (லூக்கா 8:44)

**இங்கு வஸ்திரத்தின் ஓரம்** என்பதற்குள் **ஆவிக்குரிய இரகசியம்** உண்டு

**ஆதாரமான வேதப்பகுதி** : எண்ணாகமம் 15:37-40, உபாகமம் 22:12
இவ்வேதப்பகுதிகளிலிருந்து

- தலைமுறைதோறும் **வஸ்திரங்களின் ஓரங்களில் தொங்கல்** உண்டாக்கப்பட வேண்டும்.

- நீங்கள் பின்பற்றிச் சோரம் போகின்ற **உங்கள் இருதயத்திற்கும் உங்கள்** கண்களுக்கும் ஏற்க நடவாமல்,
  **அதைப்பார்த்து**
  **கர்த்தரின் கற்பனைகளை நினைத்து**
  **அவைகளின்படி செய்வதற்கு**

அது உங்களுக்குத் தொங்கலாயிருக்க வேண்டும்.

- **என்கற்பனைகளை நினைத்து**
  **அவைகளின்படியே செய்து**
  உங்கள் தேவனுக்குப் **பரிசுத்தராயிருக்கும்படி**
  அதைப்பார்ப்பீர்களாக

**இவைகள்** இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட **தேவநியமம்** ஆகும்
இதனை ஆராயும் போது

❖ **வஸ்திரத்தின் ஓரம்** என்பது **தேவகட்டளை**
❖ **வஸ்திரத்தின் ஓரம்** என்பது **தேவகற்பனையின் நினைப்பூட்டல்**
❖ **வஸ்திரத்தின் ஓரம்** என்பது **தேவகற்பனையின் பரிசுத்தம்.**

என்னும் ஆவிக்குரிய இரகசியத்தின் அடையாளமாக வஸ்திரத்தின் ஓரம் இருப்பதை அறியலாம்.

இவைகள் **நினைத்து**
**கைக்கொண்டு**
**பரிசுத்தப்படுவதற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பூட்டுதலாய் கொடுக்கப்பட்ட அடையாளங்களாகும்.

வேதபாரகர், பரிசேயர் தங்கள் வஸ்திரங்களில் தொங்கல்களைப் பெரிதாக்கியிருந்தார்கள் என்பதைக்காணலாம். (மத்தேயு 23:5) ஆனால், இன்று புதிய ஏற்பாட்டுக் காலத்தின் **சில பிரசங்கிகள்** இச்சால்வை யினைப் போர்த்திக் கொண்டு தொலைக்காட்சிகளில் தோன்றுவது வேடிக்கைக்குரிய ஒன்றாகும்.

(ஆ) ஏசாயா 6:1-3 இல் **தேவனுடைய வஸ்திரத்தின் தொங்கலினால்** தேவாலயம் நிறைந்தது என்பதையும், பூமியனைத்தும் **அவருடைய மகிமையினால்** நிறைந்தது என்பதையும் காணலாம்.

இங்கு **வஸ்திரத்தின் தொங்கல்** என்பது **தேவனுடையபிரமாணம்** அல்லது **தேவனுடைய கட்டளை** என்பதையும் புரிந்து கொள்ளும் போது மாத்திரமே தேவ சபைகளும் தேவவார்த்தையால் நிறையும்போது **பரிசுத்தமும்,** தேவ **மகிமையும்** உண்டாகும் என்பதையும், **மகிமையின் மேல் மகிமையடையும் போது தேவசாயலாக** மாறி மறுரூபம் **அடையவும், வருகையில் எடுத்துக் கொள்ளப்படமுடியும்** என்பதை வலியுறுத்தும் பல வேதாகமப் பகுதிகளுக்கு அர்த்தம் விளங்கும்.

❖ நாமும் **தேவனுடைய வார்த்தையை** நமது **ஆவி, ஆத்துமா, சரீரத்தில்** ஏற்றுக்கொண்டு, பரிசுத்தப்படும் போது மாத்திரமே **தேவமகிமையால்** நிறைந்து தேவசாயலாக மாறமுடியும்.

(பிரகாசம் (ஒளி) என்பது மகிமையுடனும், மகிமை என்பது தேவ சாயலுடனும் தொடர்புள்ளது)

**வஸ்திரத்தின் தொங்கல்** என்பது தமிழ்வேதாகமத்தில் **தேவசெட்டை** என்று பல வேதப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேதப்பகுதிகளை நாம் ஆராயும் பொழுது:

❖ **தேவ செட்டை** என்பது **தேவநாமம்** (மல் 4:2)
❖ **தேவ செட்டை** என்பது **தேவவார்த்தை** (சங் 91:4)
❖ **தேவ செட்டை** என்பது **தேவநம்பிக்கை** (ரூத் 2:12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ தேவ செட்டை என்பது தேவ பரிசுத்தம் (சங் 63:7)
- ❖ தேவ செட்டை என்பது தேவ கிருபை (சங் 36:7)
- ❖ தேவ செட்டை என்பது தேவ பாதுகாப்பு (சங் 91:4)
- ❖ தேவ செட்டை என்பது தேவ அடைக்கலம் (சங் 61:4)

என்பதைக் கண்டுகொள்ளலாம்.

(இ) புதிய ஏற்பாட்டிலே இயேசுகிறிஸ்துவின் **வஸ்திரத்தின் ஓரம்** என்பது **இயேசுகிறிஸ்துவின் வார்த்தையுடன்** தொடர்புள்ளது என்பது **இரகசிய அர்த்தமாகும்.**

இச்சத்தியத்தை உணரும்போது மாத்திரமே நாமும் வஞ்சிக்கப் படாதிருப்போம்.

- **தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதே**
  **தேவனுக்குக் கீழ்ப்படிவதற்குச் சமம்.**
- **தேவ வார்த்தையில் நிரம்புவதே**
  **தேவன் நமக்குள் வாசம் செய்வதற்குச் சமம்.**
- **தேவவார்த்தையை அசட்டை பண்ணுவது**
  **தேவனை அசட்டை பண்ணுவதற்குச் சமம்.**

ஆகவே: தேவன் நமது கைகளில் கிடைக்கும்படி செய்திருக்கும் தமது வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தை

- **வாசிக்கவும்**
- வாசித்தவற்றை **ஆராயவும்**
- ஆராய்ந்தவற்றை **தியானிக்கவும்**

நம்மை ஒப்புக்கொடுக்கும் போது:
வேதத்தின் **புதையல்களையும், மறைபொருள்களையும், இரகசியங்களையும்** கண்டுகொள்ளத்தக்கதான, வெளிப்பாடுகள் உண்டாகும்.

**வேதத்தின் அதிசயங்களைக் காணும்படி கண்களைத் திறந்தருளும்** என்பதே நமது ஜெபமாக அமையட்டும்!

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# விருத்தசேதனத்தின் இரகசியம்

❖ கிறிஸ்தவத்திற்கு எதிரானவர்களினால் விருத்தசேதனம் என்பது விவாதப் பொருளாய்ப் போனபடியினால், வேதத்தை நேசிக்கும் விசுவாசிகளை வார்த்தைக்குள் ஊன்றக்கட்டுவதற்காய் **விருத்த சேதனத்தின் இரகசியத்தை** வெளிப்படுத்தவேண்டியது அவசியமாகின்றது.

❖ வேத ஆராய்ச்சியாளர் என்பவர்கூட தனது நூலில் தவறானதகவலைப் பதிவிட்டுள்ளதைக் கண்டதினால் **விருத்தசேதனத்தின் ஆழமான சத்தியத்தைப்** பதிவிட வேண்டியது அவசியமாகின்றது.

❖ பரிசுத்த வேதாகமத்தைக் குற்றப்படுத்த முனைபவர்களும் வெட்கப் பட்டுப் போகத் தக்கதாக விருத்த சேதனத்தின் மறைபொருள் இருப்பதினால் இதனை வெளிப்படுத்தவேண்டியது அவசியமாகின்றது.

வேதாகமத்தின் சத்தியங்களை வேதாகமத்தின் அடிப்படையிலே ஆதாரப்படுத்தவும் ஆராயப்படவும் வேண்டுமென்ற அறிவின் தெளிவில் பகுத்தறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) கர்த்தர் ஆபிராமை நோக்கி
**நீ உன் தேசத்தையும்**
**நீ உன் இனத்தையும்**
**உன் தகப்பன் வீட்டையும்** விட்டுப்புறப்படு என்றே அழைத்தார். (ஆதி 12:1)

ஆகவே, தேவனால் அழைக்கப்பட்டபோது **அவன் விருத்தசேதனம் செய்தவன் அல்ல.**

(ii) எபிரேயனாகிய ஆபிரகாம் என்பதற்கு முன்னரும் **அவன் விருத்த சேதனம் செய்தவன் அல்ல.** (ஆதி 14:13)

(iii) மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டுவந்து அவனை ஆசீர்வதித்த போதும் **அவன் விருத்த சேதனம் செய்தவன் அல்ல.** (ஆதி 14:18)

அவ்வாறெனில்:

- ஆபிரகாமுக்கு இக்கட்டளை கொடுக்கப்படக் காரணம் என்ன?
- ஆதாம் முதல், ஜலப்பிரளயத்தின் பின்னரும் கூட நோவாவிற்கும், நோவாவின் சந்ததிக்கும் இக்கட்டளை கொடுக்கப்படாததின் காரணம் என்ன?

ஆகிய இரண்டு கேள்விகளுக்குமான தேடல் அவசியமாகின்றது.

முதல் மனிதனாகிய ஆதாமின் வீழ்ச்சியினால், முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு இவ்விருத்தசேதனத்தின் கட்டளை கொடுக்கப்படக் காரண மாயிற்று என்ற சத்தியத்தை கண்டுகொள்ளலாம். இதனை **ஏதேனின் வீழ்ச்சியின் இரகசியம்** என்னவென்பதை ஆராயும்போது **விருத்த சேதனத்தின் இரகசியம்** வெளியரங்கமாகும்போது கண்டு கொள்ளலாம்.

## ❖ ஏதேனின் வீழ்ச்சியின் இரகசியம்

ஏதேன் தோட்டத்திற்குள் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப்பல காரணங்கள் இருந்தாலும், இக்கட்டுரைக்கு அவசியமான **இரண்டு காரணங்கள்** மாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) **மனிதன்** என்பதற்கு **ஆதாம்** என்று சொல்லப்படும் மூலமொழியாகிய எபிரேயத்திற்குள் பல அர்த்தங்கள் புதைந்திருந்தாலும்,

**ஆலேப் - டாலத் - மெம்** என்னும் மூன்றெழுத்தான **ஆதாம்** என்ற சொல்லிற்குள்

**தேவன் மனுகுலத்திற்குள் வெளிப்பட வாசலானவன்** என்ற ஆழமான அர்த்தமும் உண்டு. தேவன் தனது திட்டத்தை ஆதாமுக்குள் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

எவ்வாறெனில், **ஆதாமுக்குள் தேவசாயலை** வைப்பதற்கு சிருஷ்டிப்பிலே சித்தம் கொண்டிருந்தார். (ஆதி 1:26)

- **ஆதாம் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்**
  **ஏவாள் புருஷனுடைய மகிமையில் சிருஷ்டிக்கப்பட்டாள்.**
  (ஆதாரம் : ஆதி 1:27, ஆதி 2:22, 1கொரி 11:7)

- ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட **மூலமாக** இருந்தான்
  ஏவாள் ஆதாமுக்குள் இருந்து உருவாக்கப்பட்ட **பிரதியாக** இருந்தாள்.

ஆகவேதான்:

**ஆதாமையல்ல, ஏவாளை வஞ்சிப்பதற்கு சாத்தானால் நெருங்க முடிந்தது.**

ஏவாள் மூலமே ஆதாம் வஞ்சிக்கப்பட்டான் (1கொரி 11:7-8) (2 கொரி 11:3)

❖ (தேவசாயலுக்குள் இருக்கும் இரகசியங்களோ மிகவும் ஆழமானவைகள், தேவனுக்குச் சித்தமானால் வரும்காலத்தில் **தேவசாயலின் இரகசியத்திற்குள்** ஆச்சரியமானவை வெளிக்கொண்டுவரப்படும்.)

(ii) தேவன் **நியமித்த ஒழுங்கை மீறி** பழத்தின் கனியை உண்டபோது **பழத்தின் சாறு** ஆதாம் - ஏவாள் இருவருடைய இரத்தத்திலும் கலந்து போனதினால் **நன்மை, தீமை, கனியைபோலவே, மாறுபாடான சுபாவமுள்ள சந்ததிகள்** உருவாகக் காரணமாயிற்று. அதினால் **பரிசுத்தமான தேவபக்தியுள்ள சந்ததியைப்** பெறமுடியாது போயிற்று (மல்கியா 2:15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காரணங்களின் அடிப்படையிலேதான் முற்பிதாவாகிய ஆபிரகாமை அழைத்து, ஜாதிகளுக்குத் தகப்பனாக ஆசீர்வதித்து **விருத்தசேதனம்** என்னும் முறையின்மூலம் மாமிசத்தின் **நுனித்தோலை நீக்கி, பாவ ரத்தத்தை நிலத்தில் சிந்தி,** பரிசுத்த ஜாதியாக இஸ்ரவேலரை வேறு பிரித்தார்.

எனவேதான் **இஸ்ரவேலர் விருத்த சேதனத்தைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள்.**

## ஆபிரகாமும் விருத்தசேதனமும்

- ஆபிரகாம் ஜாதிகளுக்கு தகப்பனாவான் என்று தேவன் உடன் படிக்கையை ஏற்படுத்தி ஆபிராமை, ஆபிரகாமாக ஏற்படுத்தி உடன்படிக்கையின் அடையாளமாகக் கொடுக்கப்பட்டதே **விருத்த சேதனம்** என்னும் அடையாளமாகும். (ஆதி 17:11)
- ஆபிரகாமுடைய மாமிசத்தின் நுனித்தோலை நீக்கி **ஈசாக்கின்மூலம்,** இஸ்ரவேலர் என்ற கோத்திரத்தை ஏற்படுத்துவதற்கு **நித்திய உடன்படிக்கையாக** ஏற்படுத்தினார். (ஆதியாகமம் 17:24-26)
- விருத்த சேதனம் செய்யும்போது **ஆபிரகாம் 99 வயதுள்ளவனாய்** இருந்தான் **இஸ்மவேல் பதின்மூன்று** வயதுள்ளவனாயிருந்தான். ஆகவே: ஆபிரகாம் **விருத்தசேதனம் செய்வதற்கு முன்பிறந்தவன்** தான் இஸ்மவேல் ஆவான் (ஆதியாகமம் 17:24-25)

> விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்ற **கட்டளை** பரிசுத்த வேதாகமத்தை தவிர **வேறு எந்தநூலிலும்** காணமுடியாது என்பதை வேதத்தை நேசிப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

❖ உங்கள் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைக ளெல்லாம் **எட்டாம் நாளில்** விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்பது கட்டளையாகும். (ஆதி 17:12)

❖ **எட்டாம் நாளில்** குழந்தைகளுடைய இரத்தம் பூரணமாக **உறையும் நிலையை அடையும்** என்பது **விஞ்ஞானபூர்வமான உண்மை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ எட்டாம் நாளில் முதன்முதலாக விருத்தசேதனம் செய்யப்பட்டவர் ஈசாக்கு என்னும் முற்பிதாவேயாவார்.

## ஈசாக்கும் - விருத்தசேதனமும்

தேவன், ஆபிரகாமை ஜாதிகளுக்குத் தகப்பனாகவும், சாராளை ஜாதிகளுக்குத் தாயாகவும் ஏற்படுத்தி: இருவருடைய பெயருடனும் தனது பெயரின் எழுத்தை சேர்த்துப் பெயரைமாற்றி பிள்ளைக்கான வாக்கு கொடுத்து, அடையாளமாக ஈசாக்கு என்னும் பெயரையும் கொடுத்தார்.

தமிழில் ஈசாக்கு என்னும் பெயரின் மூலமொழியாக எபிரேயமொழியின் **Yts-haq** என்னும் எழுத்துக்குள், தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் மறைபொருள் புதைந்துள்ளது.

ஈசாக்கின் பிறப்பு:

- தேவனும் மனிதனும் இணைந்த உடன்படிக்கை - 10 - **Yod**
- சாராள் 90 வயதுள்ளவள் - 90 - **Ts**ad
- 8ம் நாளில் விருத்த சேதனம் - 8 - **h**
- ஆபிரகாம் 100 வயதுள்ளவன் - 100 - **Q**of

(ஆதி 17:17) (ஆதி 17:12) (ஆதி 21: 3-5)

எபிரேய மொழியின் **எண்களுக்குரிய எபிரேய எழுத்துக்களில்** இணைந்ததே ஈசாக்கு என்னும் பெயராகும்.

(**யீஸ்ராயேல்** என்னும் (**இஸ்ரவேல்**) எபிரேயப் பெயர்சொல்லும் (**ஆதி 32:28**) ஆழமான அர்த்தம்புதைந்த பெயரும்: தேவனாலே கொடுக்கப்பட்ட பெயரும் ஆகும்)

**எபிரேயத்தின் பெயர் சொற்கள் அனைத்தும் அர்த்தம் புதைந்தவைகளே!**

## சபையும் - விருத்தசேதனமும்

- சிலுவையைப்பற்றிய உபதேசத்தினால் இரட்சிக்கப்பட்டவர்களாகிய புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவைத் திறந்து கொடுத்தது சபையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்புதிய ஏற்பாட்டு சபையிலே **புறஜாதிகளும் விருத்தசேதனம் செய்யும்படி** கட்டாயம் பண்ணப்பட்டார்கள். (கலாத்தியர் 6:12)

- கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குண்டான **சுயாதீனத்தை** உளவுபார்த்து, நம்மை நியாயப் பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டு பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று (கலாத்தியர் 2:4)

*ஏனெனில்:*

இயேசுகிறிஸ்து **குற்றநிவாரணபலியாக** சிலுவையிலே: நம்முடைய **ஆவி - ஆத்துமா - சரீரத்தின்; மீறுதல் - அக்கிரமம் - பாவங்களுக்காக** மரித்ததினாலே **கடந்தகால இரட்சிப்பு** உண்டாயிற்று.

ஆகையினால்; இயேசுகிறிஸ்துவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றுமில்லை. **புதுசிருஷ்டியே காரியம்.**

## விருத்தசேதனம் என்பது :

❖ நியாயப்பிரமாணத்தின்படி - இஸ்ரவேலருக்கு - மாமிசத்தில்

❖ சுயாதீனப் பிரமாணத்தின்படி - கிறிஸ்தவர்களுக்கு - இருதயத்தில்

என்ற உண்மை புலனாகும்.

கிறிஸ்தவர்களுக்கு எதிராக **தர்க்கம் செய்பவர்களோ!**
**விருத்தசேதனம்** என்பது **தங்கள் நூலில் கட்டளையாகக் கொடுக்கப்பட வில்லை** என்பதையும், **தாங்கள் கடன்வாங்கிக் கொண்டது** என்பதையும் **உணராதிருப்பது வேதனைக்குரியது.**

எனவே, **விருத்தசேதனம்** என்பது தேவனால் இஸ்ரவேலருக்குக் கட்டளையாக கொடுக்கப்பட்டதினால்,

- **உடன்படிக்கையாக ஆத்துமாவிலும்**
- **கட்டளையாக ஆவியிலும்**
- **அடையாளமாக சரீரத்திலும்**

கைக்கொண்டு மேன்மை பாராட்டுகிறார்கள் என்ற தெளிவை உணரவேண்டும். ஏனெனில்

**தேவகட்டளைகள்** என்பது **தேவஞானத்துடன்** தொடர்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது உடன்படிக்கைக்குரிய நமக்கு தேவகட்டளையில் நடப்பதே அன்பு என்ற போதனையிருக்கும் போது.
கட்டளையிடப்படாத காரியங்களை
கடன் வாங்கிக் கொண்டாடும் போது
நாமும் பக்கவழியாய் நுழைந்தவர்களே
என்ற உணர்வு இருதயத்தில் உண்டாக வேண்டும்.

தேவனே! உமக்குப்பிரியமானதை செய்ய கற்றுத்தாரும்!
இதுவே நம் ஜெபமாக அமையட்டும்.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# மாராவின் இரகசியம்

நாம் எத்தனையோ தடவைகள் கேட்டசெய்திதான்
நாம் எத்தனையோ தடவைகள் வாசித்த பகுதிதான்
நாம் எத்தனையோ தடவைகள் ஆராய்ந்தகாரியந்தான்.

ஆனாலும்:
இவைகளைக்கடந்தும் விடியற்காலத்து வெளிச்சம் ஒன்று இவ்வேதப் பகுதிக்குள் புதைந்துள்ளது. என்பதனை உணர்த்துவதே மாராவின் இரகசியத்தின் நோக்கமாகும்.

மாராவின் இரகசியம் என்பது புதிய ஏற்பாட்டு சம்பவத்தின் நிழலாட்டம்.
ஆகவே,
இக்கட்டுரை இருபகுதிகளாகப்பிரித்து ஆராயப்பட்டுள்ளது. பகுதி ஒன்று பழைய ஏற்பாட்டு சம்பவத்தையும், பகுதி இரண்டு புதிய ஏற்பாட்டுச் சம்பவத்தையும் இணைத்து ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி I

மோசே; இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப் படுத்தினான். அவர்கள் சூர் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப் போய் மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்.

அவர்கள் மாராவிலே வந்தபொழுது, மாராவின் தண்ணீர் கசப்பா யிருந்ததினால் அதைக் குடிக்கக் கூடாதிருந்தது: அதினால் அவ்விடத் திற்கு மாரா என்று பெயரிடப்பட்டது. (யாத்திராகமம் 15:22-23)

ஆகவே: **மாரா என்பது**

- **சிவந்த சமுத்திரத்தை கடந்துவந்த இடம்** (யாத் 15:22)
- **மூன்று நாள் பிரயாணத்தில் வந்த இடம்** (யாத் 15:22)
- **தண்ணீர் கசந்த இடம்** (யாத் 15:23)

மேலேயுள்ள வேதவாக்கியங்களுக்கமைவான ஒரு ஒழுங்கைக் காணலாம்.

- **சிவந்த சமுத்திரத்தின் வழி**
- **மூன்றுநாள் பிரயாண தூரம்**
- **மாரா**

இம்மூன்று ஒழுங்கு முறைகளுக்கூடாக நாம் வேதத்தை ஆராயும் போது மாராவின் **இரகசியத்தைக்** கண்டடையலாம்.

### ❖ சிவந்த சமுத்திரத்தின் வழி

கரத்தருடைய வார்த்தையின்படியே மோசே தன்கோலை ஓங்கி, சமுத்திரத்தின்மேல் நீட்டினான், ஜலம் பிளந்து பிரிந்தபோது இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரை வழியாய் நடந்து போனார்கள். (யாத் 14:16) (யாத் 14:21) (யாத் 14:29)

**சிவந்த சமுத்திரத்தின் வழி** என்பதற்குள் பலகாரியங்களை அர்த்தப் படுத்தலாம்.

1) இச்சம்பவம் **ஞானஸ்நானத்திற்கு ஒப்பானது** என்பதாகப் புதிய ஏற்பாட்டில் காணலாம் (1கொரி 10:2)

2) **எகிப்தியன் அமிழ்ந்து போனான்**
**இஸ்ரவேலர் கடந்து போனார்கள்** (யாத் 14:13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) எகிப்தின் **அடிமைத்தனத்திலிருந்து விடுதலை**

4) **கடந்த காலப்பாவங்களிலிருந்து மன்னிப்பு**

5) ஆபிரகாமுக்கு **உன்தேசத்தைவிட்டு** வரும்படியான அழைப்பு

6) பழைய ஏற்பாட்டின் **பலிமிருகத்திற்கு தோல் உரிக்கப்பட்ட மாதிரி**

7) உன் தேசத்தின் **அடையாளங்களை உன்னைவிட்டு விலக்கு** என்னும் கட்டளை

## ❖ மூன்று நாள் பிரயாணம்

"எபிரேயருடைய தேவனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார், இப்பொழுது **வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்** போய் எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிட வேண்டுமென்று சொல்லுங்கள்.

*(யாத் 3:18) (யாத் 5:3) (யாத் 8:27)*

இங்கு **மூன்று நாள் பிரயாணம்** என்பது தேவனாலே மோசேக்குக் கொடுத்த கட்டளையின் அடையாளம் ஆகும். இதன் ஆழத்தை நாம் அறிந்து கொள்ளுவதற்காக வேதாகமத்துச் சம்பவங்களை ஆதாரமாக கொள்ளலாம்.

(1) **முற்பிதாவாகிய ஆபிரகாமை** தேவன் சோதித்தபொழுது ஈசாக்கைப் பலியிடுவதற்காக தேவன்குறித்த மோரியாமலையை நோக்கி சென்றான். **மூன்று நாள் பிரயாணத்தின் பின்னரே** கண்களை ஏறெடுத்துப்பார்த்து மோரியா மலையைக் கண்டான்.
(ஆதியாகமம் 22:4-14)

தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஆட்டுக்கடாவின் மூலம் ஒருதேவ திட்டம் வெளிப்படுத்தப்பட்டது.

## ❖ ஆட்டுக்குட்டியானவர் பலியாகப் போவதன் திட்டம் வெளிப்பட்டது.

(2) **கோத்திரப்பிதாவாகிய யாக்கோபு** தன்தேசத்திற்கும் தன் இனத் தாரிடமும் திரும்பிவிட மனதாயிருந்தபோது, லாபான் அவனுடைய ஆடுகளை **மூன்று நாள் பிரயாண தூரத்தில்** வேறுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதித்தான். தேவனோ யாக்கோப்பை ஆசீர்வதித்து விடுதலை யாக்கினார்.
*(ஆதி 30:36) (ஆதி 31:3)*

யாக்கோபு தன்மனைவிகள் இருவரையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு யாப்போக்கு என்ற ஆற்றின்துறையைக் கடந்த பொழுது தேவனுடைய தூதனானவர் அவனைச் சந்தித்து, ஆசீர்வதித்து, அவன் நடையைமாற்றி, யாக்கோபு என்பவனை இஸ்ரவேல் என்று அழைத்தார். அவன் பெனியேலைக் கடந்தபோது சூரியன் உதயமாயிற்று *(ஆதி 32:23-32)*

❖ **தேவன் ஆசீர்வதித்து - கோத்திரத்தை தெரிந்து கொண்ட திட்டம் வெளிப்பட்டது.**

இவ்வாறே,
இங்கும் **மூன்றுநாள்** பிரயாணதூரமானது மோசேயின் மூலம் எகிப்திலிருந்து விடுதலையாகி சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வந்த இஸ்ரவேலருக்கும் தமது திட்டத்தை வெளிப்படுத்துவதற்கு மாராவைக் குறித்திருந்தார். மாராவிற்கான,

**மூன்று நாள் பிரயாணம் என்பது.**

- பாவத்திற்கும் பரிசுத்தத்திற்குமான தூரம்
- பாவம் கலக்கக்கூடாத இடைவெளி
- முற்றிலும் பிரிக்கப்பட்ட வாழ்க்கை

இது நமது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பொருந்தும்; நம்மை வழிநடத்தும் மேய்ப்பனுக்கும் பொருந்தும்; சபைக்கும் பொருந்தும்.
ஆனால்,
எத்தனைபேருக்குப் பொருந்தும் என்பதும் எத்தனை மேய்ப்பனுக்குப் பொருந்தும் என்பதும்; எத்தனை சபைகளுக்குப் பொருந்தும் என்பதும் **கேள்விக்குறியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **மாரா**

எகிப்தைவிட்டு, செங்கடலைக்கடந்து, மூன்று நாள் பிரயாணத்தில் வந்து சேர்ந்த இடம் மாரா ஆகும்.

அங்கு வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட மூன்று காரியங்கள் கவனத்திற்குரியவைகளாகும்.

(1) முறுமுறுப்பு (யாத் 15:24)

(2) தேவன்காண்பித்த மரம் (யாத் 15:25)

(3) நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத் 15:26)

## 1) முறுமுறுப்பு

அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டு விடுதலையான இஸ்ரவேலர்கள்,

தேவனுடைய சோதனையைக் கண்டு கொள்ளத்தவறிவிட்டார்கள். வனாந்தரப்பயணம் முறுமுறுப்பை உண்டாக்கிவிட்டது.

**முறுமுறுப்பு விசுவாசக்குறைவினால் உண்டாவது.**

- **தண்ணீர் கசப்பாயிருந்தது** என்பது **சாதாரண அர்த்தம்**
- **விசுவாசக்குறைவு** என்பது **ஆவிக்குரிய அர்த்தம்**
- **புறஜாதிகள் இஸ்ரவேலருக்கு வெறுப்பானவர்கள் என்பது இரகசிய அர்த்தம்**

**இஸ்ரவேலரின் தவறுதல் புறஜாதிகளுக்கு இரட்சிப்பாயிற்று.**

## (2) தேவன் காண்பித்த மரம்

தேவன் காண்பித்தமரம் உடனே உண்டாகவில்லை, ஏற்கனவே உண்டாக்கியிருந்து **ஆயத்தம் பண்ணப்பட்ட** மரம்.

மோசே தண்ணீரில் போட்டவுடன், தண்ணீர் மதுரமாயிற்று.

இஸ்ரவேலருக்கு வெறுப்பாயிருந்தவர்கள் மீதும் தேவனுடைய அன்பின் திட்டம்.

- மோசே தண்ணீரில் மரத்தைப்போட்டான் என்பது சாதாரண அர்த்தம்
- சிலுவை மரத்தின் மூலம் இயேசுகிறிஸ்து புறஜாதிகளுக்கு சுவிஷே -சமாய் அறிவிக்கப்படுவார் என்பது ஆவிக்குரிய அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புறஜாதிகளும் இயேசு கிறிஸ்துவுக்குள் வாக்குத்தத்தத்தின் உடன் பங்காளிகள் என்பது ஆவிக்குரிய அர்த்தமாகும்.

**பிதா தனது மகிமையை வெளிப்படுத்திய இடம் மாரா**

**இதற்கான ஆதாரங்கள் :**

(அ) இந்த இரகசியத்தை மூலமொழியாகி எபிரேயத்தின்மூலம் அறியலாம்.
தமிழில் **மாரா** என்பது எபிரேய எழுத்துக்களான **மெம்-ரேஸ்-ஹெ** ஆகிய மூன்று எழுத்துக்களின் உச்சரிப்பாகும்.
Mem - Resh - Hey -- Marah = மாரா

❖ **Mem** என்பதின் பொருள் **தண்ணீர் - சமுத்திரம்** என்பதாகும். **தண்ணீர் - சமுத்திரம்** என்பதை வேதாகமத்தில் **ஜனங்களும் - கூட்டங்களும் - ஜாதிகளும் - பாஷைக்காரரும்** என்பதாக ஒப்பிடப்பட்டுள்ளது. (வெளி 17:15) (எசே 26:3)

❖ **Resh** என்பதின் பொருள் **தலை** என்பதாகும். புதிய ஏற்பாட்டிலே, குடும்பத்திற்கும் - சபைக்கும் **இயேசுகிறிஸ்துவே தலை.** (1கொரி 11:3) (எபே 1:32)

❖ **Hey** என்பதின் பொருள் **பார் - வெளிப்பாடு** என்பதாகும். வெளிப்பாடுகள், அற்புதங்களை **கவனித்துப்பார்** என்னும் அர்த்தத்துடன் வரும்.

ஆகவே:

❖ **ரேஸ் (தலை)** என்னும் இயேசுகிறிஸ்து (மெம்) தண்ணீருக்குள் போடப்படும்போது, கசப்பு மாறுவதைப் (ஹெ) பார் என்பதாகவும் அர்த்தம் தரும்.

❖ தலையாகிய இயேசுகிறிஸ்து **சிலுவைமரத்தில் செய்து முடித்தவைகள்** ஜனங்களுக்குள் **சுவிஷேசமாய்** அறிவிக்கப்படும்போது, அவர்கள் வாழ்வின் கசப்புகள் மாறிவிடும் என்பது வெளிப்பாடாகக்காட்டப்பட்டது.

❖ இஸ்ரவேலருக்கு கசப்பாயிருந்த **புறஜாதிகள்** இயேசுகிறிஸ்துவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஷேசத்தின் மூலம் ஒரே மந்தையாவார்கள் என்றுகாட்டப்பட்டது. **குடிக்கக்கூடாதிருந்தது** என்பது இஸ்ரவேலரால் ஏற்றுக்கொள்ளப் படாதவர்கள் புறஜாதிகள் என்பதையும், **கசப்பு** என்பது வெறுக்கப் பட்டவர்கள் புறஜாதிகள் என்பதையும் குறிக்கும்.

**மாரா** என்னும் எபிரேயச் சொல்லுக்குள் **இக்காரியமானது இரகசியமாய்** இருந்தது.

இதனையே, **எபேசியர் 3:3-6** இல்

❖ புறஜாதிகள் சுவிஷேசத்தினால் இணைக்கப்படுவது **இரகசியம்** என்றும்,

❖ இந்த **இரகசியத்தை** இயேசுகிறிஸ்துவே வெளிப்படுத்தியதாகவும்;

❖ இந்த **இரகசியம்** இப்பொழுது **ஆவியானவரால்** வெளிப்படுத்தப் பட்டிருக்கிறதைப் போல,
**முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை** என்று பவுல் கூறுகின்றார்.

## (3) நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்

மாராவிலே தண்ணீரை மதுரமாக்கி தம்முடைய மகிமையை வெளிப்படுத்திய தேவன்:

**தேவசத்தத்தை கவனமாகக் கேட்டு**
**தேவனுடைய பார்வைக்கு செம்மையானதை செய்து**
**அதைக் கைக்கொண்டு நடக்கும்போது**

**"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"** என்ற நியமத்தையும், நியாயத் தையும் வெளிப்படுத்தினார்.

**தேவவார்த்தைக்குள் கீழ்படியும் போது சுகம்** என்பது புதிய ஏற்பாட்டுச் சபைகளுக்கும் பொருத்தமானதேயாகும்.

### பகுதி II

பழைய ஏற்பாட்டுச்சம்பவமான **மாராவின் அற்புதமானது** புதிய ஏற்பாட்டின் **கானாவூர் அற்புதத்துடன்** இணைந்திருப்பதும், ஆவியானவர் இணைத்திருப்பதும் ஆச்சரியமானதாகும். கண்திறக்கப்படவேண்டிய காரியங்கள் பலவும் புதைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) கானாவூரின் முதலாம் அற்புதம்

**வேத ஆதாரப்பகுதி : யோவான் 2:1-11**

கானாவூர் கல்யாணத்தின் சம்பவங்களை எளிதாகப்புரிந்து கொள்ளுவதற்காக மூன்று பகுதியாகக் காணலாம்.

(அ) மூன்றாம் நாள்
(ஆ) கலியாண வீடு
(இ) கற்சாடிகள்

**(அ) மூன்றாம் நாள்**

❖ இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபின் மூன்றாம் நாள். (யோவான் 2:1)

❖ இயேசுகிறிஸ்துவும் சீடர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். (யோவான் 2:2)

❖ இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களுடன் கானாவூர் கலியாணத்திற்குச் சென்றார்.

● (சிவந்த சமுத்திரத்தைக் கடந்த மோசேயும் - விடுதலையடைந்த ஜனங்களும் மூன்றாம் நாளில் மாராவைச் சென்றடைந்தது போன்று, இயேசுகிறிஸ்துவும் ஞானஸ்நானம் பெற்று மூன்றாம் நாளில் தமது சீடர்களுடன் சென்றார் என்பது இங்கு ஒப்புநோக்கம் கொண்டதாகும்.)

**(ஆ) கலியாணவீடு**

❖ கலியாணவீடு என்பது ஏற்கனவே ஆயத்தம் செய்யப்பட்ட ஒழுங்கு.
❖ கலியாண விருந்தில் **குறைவு**
❖ இயேசுவும் அழைக்கப்பட்டிருந்தார்.

● (மாராவின் தண்ணீர் இஸ்ரவேலருக்குக் குடிக்கக்கூடாதிருந்த தினால் முறுமுறுப்பு உண்டானதோ:
அவ்வாறே:
ஆயத்தம் பண்ணப்பட்ட கலியாண விருந்தில் திராட்சை இரசம் குறைவு என்பது மாராவில் முறுமுறுப்புக்கு **இணையான விசுவாசக் குறைவு** என்பதுடன் ஒப்புநோக்கப்பட வேண்டியதொன்றாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கற்சாடிகள்
- ஆறுகற்சாடிகள்
- சுத்திகரிப்பிற்கான கற்சாடிகள்
- தண்ணீர் நிரப்பப்பட்ட கற்சாடிகள்

**ஆறுகற்சாடிகள்**

வேதாகமத்தில் ஆறு (6) என்பது மனிதனைக்குறிக்கும் **குறியீட்டு எண்ணாகும்.** (வெளி *13:18*)

**சுத்திகரிப்பிற்கான கற்சாடிகள்**

யூதர்கள் தங்கள் சுத்திகரிப்புக்காக **வீட்டிற்குவெளியே** இருந்தகற்சாடிகள் இவைகள் இங்கு புறஜாதிகளைக் குறிக்கும் **குறியீட்டு அடையாளமாகும்.**

**தண்ணீர் நிரப்பப்பட்ட கற்சாடிகள்**

இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த வேலைக்காரரினால் தண்ணீர் நிரப்பப்பட்டவைகள்.

இவை சுவிஷேசத்தினால் இரட்சிப்பைப்பெற்ற **புறஜாதிகளைக் குறிக்கும் அடையாளமாகும்.**

ஆகவே: கற்சாடிகள் என்பது இஸ்ரவேலரின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களும்: வாக்குத்தத்திற்கு அந்நியரும், காட்டொலிவ மரமாகிய புறஜாதிகளையும் - ஜாதிகளையும், பாஷைக்காரரையும் குறிப்பனவாகும்.

- (மாராவிலே தண்ணீரில் மரத்தைப்போட்டபோது **மதுரமான தண்ணீர்** எப்படி புறஜாதிகளை குறிக்கின்றதோ,
  அவ்வாறே:
  இயேசுகிறிஸ்துவின் வார்த்தைக்குகீழ்ப்படிந்த சீடர்களால் இரட்சிப் பைப்பெற்று மிகுந்த சுவையுடைய **திராட்சை இரசமாகமாறிய புறஜாதிகளும்** ஒரேசரீரமாக மாறியதை ஒப்பிட்டு நோக்கப்படவேண்டிய தொன்றாகும்.)

கானாவூரின் கலியாணவீட்டில் **இயேசுகிறிஸ்து முதலாம் அற்புதத்தை செய்து** தமது மகிமையை வெளிப்படுத்தியபோது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். (யோவான் *2:11*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (2) கானாவூரில் இரண்டாம் அற்புதம்

மாராவிலே தண்ணீரை மதுரமாக்கி அற்புதத்தைச் செய்தபின்னர்: அதே மாராவில் **"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"** என்பதை வெளிப்படுத்தியதைப் போன்று: இயேசுகிறிஸ்துவும் தாம் தண்ணீரை திராட்சைரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்குத்திரும்பி வந்து இரண்டாம் அற்புதத்தையும் செய்தார்.
*(யோவான் 4:46) (யோவான் 4:53)*

கானா ஊருக்கு மறுபடியும் வந்தபோது கப்பர்நகூமிலே இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனின் வியாதியை குணமாக்கினார். (யோவான் 4:46-53) இவ் அற்புதத்தின் மூலம் இயேசுகிறிஸ்து **"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"** என்ற மகிமையை விளங்கப்பண்ணினார்.

- (மாராவின் அற்புதத்திற்கிணையான இரண்டு சம்பவங்களும், கானாவூரின் இரண்டு அற்புதங்களுடனும் இணைந்ததை சீஷர்கள் கண்டார்கள்.

**"அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"** என்றார் யோவான்.
*(யோவான் 1:14)*

ஆவியானவர் இணைத்த பழையதும் புதியதுமான இம் மாராவின் இரகசியத்தின் மூலம் தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகின்ற அறிவில் பெருகுவோம்.)

| மாரா | கானா ஊர் |
|---|---|
| செங்கடலைக்கடந்து **மூன்று நாள் பிரயாணத்தில்** சந்தித்த இடம் | இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின் மூன்றாம் நாளில் சென்ற இடம் |
| மோசேயும், இஸ்ரவேல் ஜனங்களும் சென்றார்கள் | இயேசுவும் சீடர்களும் சென்றார்கள் |
| தண்ணீர் கசப்பாயிருந்தது **(முறுமுறுப்பு)** | திராட்சைரசம் குறைவுபட்டது (விசுவாச குறைவு) |
| தண்ணீர் மதுரமாயிற்று (புறஜாதிகளுக்கும் **இரட்சிப்பு** என்ற வெளிப்பாடு) | தண்ணீர் திராட்சை ரசமாயிற்று. (புறஜாதிகளும் **மணவாட்டி**யாவார்கள் என்ற மறை பொருள் வெளிப்பட்டது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மரம் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது | இயேசுகிறிஸ்து அழைக்கப்பட்டிருந்தார் |
| தண்ணீர் மதுரமாகி **அற்புதம் நடந்தது** | இயேசுகிறிஸ்து **முதலாம் அற்புதத்தை** செய்து தமது மகிமையை வெளிப்படுத்தினார். |
| தேவன் **'நானே உன் பரிகாரி'** என்று மாராவில் வெளிப் படுத்தினார். | இயேசுகிறிஸ்து தமது வார்த்தையினால் சுகமளித்து, கானாஊரில் **இரண்டாம் அற்புதத்தை செய்து, 'நானே அவர்'** என்று தன்னை வெளிப்படுத்தினார். |

கர்த்தாவே!

"சத்தியம் சார்ந்த உண்மைகளைக் கற்றுக்கொள்
ஞானமுள்ள இருதயத்தை எங்களுக்குத் தாரும்"
ஆமென்.

(மாராவைவிட ஆழமான இன்னுமொரு ஒப்பீட்டுக்கட்டுரை தேவனுக்குச் சித்தமானால் அடுத்தநூலில் வெளிவரும். இக்கட்டுரையை வாசிப்பவர்கள் உங்கள் அபிப்பிராயங்களை அறியத்தரவும். ஊழியத்திற்காக ஜெபிக்கவும்)

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# சர்ப்பத்தின் இரகசியம்

(ஏதேன் தோட்டத்தின் வீழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு, உலகமனைத்தையும் மோசம் போக்கும் **பிசாசு** என்றும், **சாத்தான்** என்றும் சொல்லப்பட்ட **பழையபாம்பினுடைய** காரியங்கள் ஆழமாக ஆராயப்படவேண்டியதாயிருந்தாலும், அவசியம் ஏற்பட்டபடியினால், அடிப்படையான **சில சத்தியங்களை உள்ளடக்கி சர்ப்பத்தின் இரகசியம்** என்னும் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.)

- **ஆதாமும் - சிருஷ்டிப்பும்**

(i) தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே மனிதனை உருவாக்கினார் ஆகவே:

❖ **மனிதன் மண்ணின் சாயலானவன்.**

(ஏசாயா 44:13) (1கொரி 15:49) (ரோமர் 8:3)

(ii) மண்ணின் சாயலான மனிதனுக்குள் தேவன் ஜீவசுவாசத்தை ஊதிய போது,

❖ ஆவியில் ⟶ பரிசுத்த ஆவியானவராகிய **தேவனின்சாயல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ ஆத்துமாவில் ——→ குமாரனாகிய **தேவனின்சாயல்**
- ❖ சரீரத்தில் ——→ பிதாவாகிய **தேவனின்சாயல்**

| |
|---|
| **மண்ணான மனிதனுக்குள் தேவசாயல் உண்டானது** |

இதுவே, **தேவன்** தன்னுடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார் என்னும் வேதவாக்கியத்தின் அர்த்தமாகும். (*ஆதி 1:26*)

**ஆதியிலே தேவன்** (*ஆதி 1:1*) என்னும் சொல்லில் **தேவன்** என்பதை மூலமொழியில் **ஏலோஹிம்** என்று தேவனை **சிருஷ்டிப்பில்** குறிப்பிடப் பட்டுள்ள இரகசியம் இதுவேயாகும்.

ஏலோஹிம் என்பதற்குள் **நமது சாயலும்** - **நமது ரூபமும்** அடங்கும் (*ஆதி 1:26*)

## ❖ தேவசாயல் என்பது தேவவார்த்தையால் மனிதனுக்குள் உண்டாவது.

**ஜீவன்** என்னும் சொல்லானது வார்த்தையுடன் தொடர்புள்ளது. **ஜீவ ஊற்று ஜீவதண்ணீர்** - **ஜீவசுவாசம்** - **ஜீவ ஒளி** போன்றவைகள் நல்ல ஆதாரங்களாகும்.

தேவன் **ஜீவசுவாசத்தை** ஊதினார் என்னும்போது:

இதுவே: **ஆதாமுடன் செய்த உடன்படிக்கையாகும்.**
(*யோபு 31:33*) (*ஏசாயா 43:27*) (*ஓசியா 6:7*)

## ❖ தேவன் ஒளியை வஸ்திரமாகத் தரித்திருப்பதுபோல (சங்கீதம் 104:2)

## ஆதாமும் ஏவாளும் ஒளியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டிருந்தார்கள்.

அதனால், ஆதாம் - ஏவாள் தங்கள் நிர்வாணத்தை உணரமுடியவில்லை.

| |
|---|
| தேவமகிமை நிர்வாணத்தை மூடிய வஸ்திரமாயிருந்தது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தேவகட்டளையை மீறிப்பாவஞ்செய்த பொழுது, தேவமகிமை அவர்களை விட்டு விலகியது.

அப்பொழுது:

**அவர்கள் நிர்வாணத்தை உணர்ந்தார்கள்.**

பாவம் செய்த பொழுது ⟶ மகிமை விலகியது

- ❖ ஆவியில் - மரணம் - ஆவியானதேவன் - விலகினார்
- ❖ ஆத்துமாவில் - மரணம் - குமாரனாகியதேவன் - விலகினார்
- ❖ சரீரத்தில் - மரணம் - பிதாவாகியதேவன் - விலகினார்

- **பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்**
- **மரணம் மனுகுலத்தில் பிரவேசித்தது**
- **பாவசந்ததி மனுகுலத்துள் வித்திடப்பட்டது**

(iii) பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகின்ற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள் (ஆதி 3:8)

- **தேவன் மனிதனுடன் உறவாடுகிறவராய் இருந்தார்**
- **தேவன் மனிதனுடன் உரையாடுகிறவராய் இருந்தார்**
- **தேவன் மனிதனுக்கு உணர்வூட்டுகிறவராய் இருந்தார்**

(**உணர்வு** என்பது ஆத்துமாவில் உண்டாவது,
**உணர்ச்சி** என்பது சரீரத்தில் உண்டாவது)

(**பகலின் குளிர்ச்சியான வேளை** என்பது பகலின் குளிர்ச்சியாகிய நிழல் **சாய்ந்துபோகும் வேளையாகும்.** (உன் 4:6)

## ❖ தேவன் ஒளியாயிருக்கிறார், ஆதாமும் தேவசாயலா யிருந்தான்.

| **ஒளியிலிருந்து உண்டான சத்தத்துடன் ஆதாம் உரையாடினான்** |
|---|

இவ்வாறே:

- முட்செடியின் **அக்கினியில்** இருந்து **மோசேயுடன்** பேசினார். (யாத் 3:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **ஊரீம் - தும்மீம்** உடைய வெளிச்சம் மூலம் **பிரதான ஆசாரியனுடன்** பேசினார் (யாத் 28:30) (எண் 27:21)

* **ஒளியிலிருந்து** உண்டான **பிரகாசத்தில், பவுலுடன்** பேசினார். (அப் 9:3-4)

**இன்றும் வேதவெளிச்சத்தில் நம்முடனும் பேசுகின்றார்.**

(பிரகாசம், மகிமை, தேவசாயல் என்பவைகள் ஒளியுடன் தொடர்பு டையவைகள்.
**தேவசாயல்** என்பது **மேன்மையான நிலையாகும்.**)

## சர்ப்பமும் - தந்திரமும்

(i) தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின **காட்டு ஜீவன்களைப்** பார்க்கிலும் **சர்ப்பமானது தந்திரமுள்ளதாய்** இருந்தது. (ஆதி 3:1)

❖ **சகல காட்டு ஜீவன்களிலும்** என்பது காட்டுக்குள் இருந்த **சகல உயிரினங்களையும் குறிக்கும்.**

❖ **தந்திரம்** என்பது சுபாவம் அல்லது **குணாதிசயமாகும்.**

(ஆதாம் சகல நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப்பறவைகளுக்கும், சகல விதகாட்டுமிருகங்களுக்கும் பெயரிட்டான் என்னும்போது, அவைகளின் **குணாதிசயம்** அல்லது **சுபாவத்தின்** தன்மையிலே பெயரிட்டான் (ஆதி 2:19-20)

❖ **தந்திரம்** என்னும் சொல் முதன் முதலில் **சர்ப்பத்துடன் இணைத்தே** தமிழ்வேதாகமத்தில் இடம் பெறுகின்றது. (ஆதி 3:1) (2 கொரி 11:3) ஆனால்,
**தந்திரம்** என்பது **சாத்தானோடும்** இணைக்கப்பட்டுள்ளது (2கொரி 2:11) (எபே 6:11)
மேலும்:
**தந்திரம்** என்பது **போதகம் - வேதப்புரட்டு - கட்டுக்கதைகள்** என்பவற்றுடனும் இணைக்கப்பட்டுள்ளது.
(எபே 4:14) (2பேதுரு 2:1) (2 பேது 1:16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, தந்திரம் என்னும் சொல்லின் அர்த்தத்தை ஆழமாக அறிந்து கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம் என்பதை நமக்கு உணர்த்தி நிற்பதை காணலாம்.

**(ii) தந்திரம் என்பது உண்மையைப்போல தோற்றமளிக்கும் மாயை**

- ❖ தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதைவிட, தன்னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியப்பண்ணுவது தந்திரம் ஆகும்.
- ❖ தன்னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியப்பண்ணும்போது, தன்னை அதிகாரம் உள்ளவனாக்குவது தந்திரம் ஆகும்.
- ❖ தேவனுடைய கட்டளையை மீறி, தன்னுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியப் பண்ணும்போது தன்னைதேவனாக்குவது தந்திரம் ஆகும்.

ஆகவே, தந்திரம் என்பது:

(1) தந்திரமான **யோசனைகளை** உண்டாக்கும். (யோசுவா 9:4)

(2) தந்திரமான **ஆலோசனைகளை** உண்டாக்கும். (மத்தேயு 26:4)

(3) தந்திரமான **வஞ்சனைகளை** உண்டாக்கும். (2கொரி 11:3)

(4) தந்திரமான **போதனைகளை** உண்டாக்கும். (எபே 4:14)

(5) தந்திரமான **கட்டுக்கதைகளை** உண்டாக்கும். (2பேதுரு 1:16)

(6) தந்திரமான **வேதப்புரட்டுக்களை** உண்டாக்கும். (2பேதுரு 2:1)

- **வேதம் சொல்லாத விழாக்களும் - பங்காளர்திட்டமும் - குடும்ப ஆசீர்வாத திட்டமும் சாத்தானின் தந்திரமேயாகும்.**
  (2கொரி 2:11) (எபே 6:11)

- இவைகள் மனிதனுக்குத் **தெய்வீக ஆசீர்வாதத்தை** கொண்டு வருமேயானால் **வேதம் தேவையில்லை. வேதத்தில் நடக்கத் தேவையில்லை** என்பதை நாம் உணரவேண்டும்.

ஆகவே:

- **வார்த்தைக்குள் வராத ஆசீர்வாதம்** பிசாசின் தந்திரமே
  **இது தேவ ஆசீர்வாதம் அல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) சர்ப்பத்தின் தந்திரத்தினாலே ஏவாள் வஞ்சிக்கப்பட்டுப் போனாள். ஏவாளின்மூலம் ஆதாமும் பாவத்தில் வீழ்ந்தான்.

- ❖ **ஏவாள் செவிகொடுத்தாள்**
- ❖ **ஏவாள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாள்**
- ❖ **சர்ப்பம் தேவனாயிற்று**

ஆதாம் - ஏவாளுடைய தவறுதலினால்:

- ❖ **ஆத்துமாவில்** - **அக்கிரமம் உண்டாயிற்று**
- ❖ **ஆவியில்** - **மீறுதல் உண்டாயிற்று**
- ❖ **சரீரத்தில்** - **பாவம் உண்டாயிற்று**

எவ்வாறெனில்:

- தேவன் செய் என்பதை செய்யாதது **அக்கிரமம்**
- தேவன் செய்யாதே என்பதை செய்வது **மீறுதல்**
- தேவசித்தம் செய்யாது **அநீதியானவை பாவம்**

❖ **பாவம் - அக்கிரமம் - மீறுதல்** என்பதை வேதாகமத்தின் பலவேதப் பகுதிகள் இதனைச் சுட்டிக்காட்டுவதைக் காணலாம்.
(யோபு 13:23) (யோபு 14:16-17) (யோபு 7:20-21)
(சங் 32:1-2) (சங் 32:5) (சங் 52:1-3)
(ஏசாயா 43:24-25) (தானி 9:24) (மீகா 7:18-19)

❖ **பாவம் - அக்கிரமம் - மீறுதல்** என்பதை இயேசுகிறிஸ்து சிலுவையிலே குற்ற நிவாரணபலியாக நமக்காகச் **செய்து முடித்தார்**. இதனை விசுவாசித்து நாம் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, **நமது கடந்தகாலப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.**

## சர்ப்பமும் ஏதேனும்

(அ) ஏதேன் தோட்டத்திலே **சர்ப்பத்தின்வடிவத்திலே சாத்தான் வந்தான்** என்று தெளிவுவேண்டும்.

**ஆதாரம்** : வெளிப்படுத்தல் 12:9, 20:2
உலகமனைத்தையும் மோசம் போக்குகின்ற பிசாசு என்றும் **சாத்தான்** என்றும் சொல்லப்பட்ட **பழைய பாம்பாகிய** வலுசர்ப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேதவசனங்களில் **பழையபாம்பு** என்று குறிப்பிடப்படுவது சாத்தான் என்பதைக் காணலாம்.

(ஆ) ஏதேன் தோட்டத்தில் **ஒளியின் வடிவத்தின் சாத்தான்**

இங்கு தேவதூதர்கள் குறித்த அடிப்படையான மூன்று காரியங்களை நாம் அறியவேண்டும்.

- தூதர்களுக்குச் **செட்டைகள்** உண்டு. (ஏசாயா 6:2) (ஏசே 1:6) ஆகவே,
  **பறக்கமுடியும்**
- தூதர்கள் **தேவனை துதிப்பவர்கள்** (ஏசேயா 6:3-4) ஆகவே:
  **பேசமுடியும்**
- தூதர்களுக்கு ஒளியின் மகிமையுண்டு (எசே 1:16) (எசே 1:28) ஆகவே:
  **ஒளிரக்கூடியவை**

சாத்தானும் **விழுந்து போன தூதன்** என்பதையும் நாம் அறிய வேண்டும்.

**ஆதாரங்கள்:**

(i) சாத்தானும் **ஒளியின் தூதனுடைய** வேஷத்தை தரித்துக் கொள்வானே. (2 கொரி 11:14)

- தேவதூதர்களுக்கு **கர்த்தரின் மகிமையான ஒளி** கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் மனிதர்களுக்குள் வெளிப்படும்போது **மகிமை பிரகாசித்ததைக்** காணலாம். (லூக்கா 2:9) (அப்போஸ்தலர் 10:30)
- வேஷத்தை தரித்தல், சாயலை அணிதல் (1கொரி 15:49) போன்ற குறியீட்டு வார்த்தைகள் **அவ்வாறு மாறுவதை** குறிப்பனவாகும். சாத்தானும் ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்தபோது வெளிச்சம் பிரகாசித்தது.

**ஒளியின் வடிவில் தேவதூதர்கள் வெளிப்பட்டார்கள்**
**ஒளியின் வடிவில் வெளிப்பட்டு தேவமனிதர்களுடன் பேசினார்கள்**
**தேவ மனிதர்களும் அடையாளம் கண்டார்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) *நீதிமொழிகள் 23:31-32*

மதுபானம் **இரத்தவர்ணமாயிருந்து**, பாத்திரத்தில் **பளபளப்பாய்** தோன்றும்போது நீ அதைப்பாராதே. அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல **கடிக்கும்**, விரியனைப் போல **தீண்டும்**.

மதுபானத்தையும் சர்ப்பத்துடன் இணைத்து மறைவான குறியீட்டுச் சொற்களால் தொடர்புபடுத்துவதைக் காணலாம்.

மதுபானம் - மனதை மயக்குவது
பளபளப்பு - நம்மை தன்வயப்படுத்துவது
தீண்டும் - சரீரத்தில் மரணத்தை உண்டாக்குவது.

- மதுபானத்தின் **இரத்தவர்ணம்** - **பளபளப்பு** - என்பது **ஒளிரக்கூடியது** என்பதின் குறியீடுகள்.

(iii) துன்மார்க்கனுடைய **விளக்கு** (யோபு 18:5) (நீதி 24:20)
துன்மார்க்கனுடைய **ஒளி** (யோபு 38:15)
துன்மார்க்கனுடைய **தீபம்** (நீதி 13:9)

இங்கும் **விளக்கு** - **ஒளி** - **தீபம்** என்பவை வெளிச்சம் என்பதின் குறியீடாக இருக்கின்றது.
வேதாகமத்தில் **தேவனுடைய வார்த்தைக்கு**, விளக்கு - தீபம் - ஒளி என்பவை ஒப்பிடப்பட்டுள்ளது.
ஆகவே;
**துன்மார்க்கனுடைய விளக்கு** - **ஒளி** - **தீபம்** என்பவை தேவனுடைய வாரத்தைக்கு எதிரானது என்னும் **இரகசியத்தை அறியலாம்**.

❖ **தேவனுடைய ஒளியிலிருந்து உண்டானசத்தத்தில் ஆதாம் உரையாடினான் என்பதை அறிந்ததால்,**

**சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைதரித்து பேசிய போது ஏவாள் செவிகொடுத்து வஞ்சிக்கப்பட்டாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவனுடைய ஒளியின் சத்தத்தில் உறவாடியவர்கள்**
**சாத்தானுடைய தந்திரத்தை அறியாது**
**சர்ப்பத்தின் ஒளியின் சத்தத்திற்கு செவிகொடுத்தார்கள்**

இவ்வாறே:
**தேவகட்டளைக்குச் செவியை விலக்கும் போது**
**நாமும் வஞ்சிக்கப்படுவோம் என்பதே**
**நமக்கான எச்சரிப்பாகும்.**

### ❖ சர்ப்பமும் - ஏவாளும்

சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்ததுபோல.. (2 கொரி 11:3) என்னும் வேதவார்த்தைக்குள் இருக்கும் காரியங்கள் ஆச்சரியமான மறைபொருள்களை உள்ளடக்கியது ஆகும்.

இவ் ஆச்சரியமான காரியங்களைக் காணும்போது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் கண்முன் தெளிவாகும். பல கேள்விகளுக்கான பதில்கள் தெரியவரும்.

இக்காரியங்களில் தெளிவான கண்ணோட்டம் கிடைப்பதற்காகவே இருபிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

## I

(அ) ஆதாம் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். (ஆதி 1:27) ஏவாள், ஆதாமுடைய விலாஎலும்பிலிருந்து, ஆதாமுக்காக உண்டாக்கப் பட்டாள். ஆகவே ஏவாள், **தேவசாயலில் அல்ல.**
**புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.**
(ஆதி 2:20-24) (1கொரி 11:7-9)

- தேவன், தாம் உறவாடுவதற்காக ஆதாமைத் தேவசாயலில் சிருஷ் டித்தார்.

**ஆதாமுடன் உறவாடுவதற்காக ஏவாள் உண்டாக்கப்பட்டாள்.**
ஆகவே, ஏவாள் **புருஷனுடைய மகிமையாக இருந்தாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆகவேதான்:

**சாத்தான் ஆதாமையல்ல; ஏவாளை நெருங்க முடிந்தது.**
**சாத்தான் ஆதாமையல்ல; ஏவாளைவஞ்சிக்க முடிந்தது.**
**சாத்தான் ஆதாமை ஏவாள் மூலமே வஞ்சிக்கமுடிந்தது.**

- சாத்தானின் வெற்றியினால்:

**ஜீவனத்தின் பெருமை ஏதேனில் உண்டானது**

- மகிமைக்கு மகிமை வேறுபட்டிருப்பதால், மகிமையின்மேல் மகிமையடையும் போதுதான் தேவசாயல் உருவாகும் (2 கொரி 3:18) (ரோமர் 8:29)
- தேவவார்த்தையானது **ஆவி - ஆத்துமா, சரீரத்தில்** மகிமையின் மேல் மகிமையடைய செய்து தேவசாயலாக மாற்றவேண்டும்.
- தேவசபையானது தேவசாயலை நமக்குள் உருவாக்கும் ஊழியம் செய்ய வேண்டும்.
- தேவசாயலாய் மாறுவதற்கு நமது மனம் புதியதாய் மாறவேண்டும்.

**தேவசாயல் என்பது தேவனுக்கும் மனிதனுக்குமான உறவுநிலை**

(ஆ) ஏவாள் தேவமகிமையினால் மூடப்பட்டிருந்தாள். தேவமகிமை ஆடையாக இருந்தது. ஆகவே நிர்வாணம் தெரியவில்லை.

- பரலோகத்திலே **பெண்கள் குறித்ததான** எவ்விதமான வழிபாடுகள் - அடையாளங்கள், சாயல்கள், குறியீடுகள் எதுவுமே பரிசுத்த வேதாகமத்தில் இல்லை. (பெண்தெய்வங்களும் உள்ளடங்கும்)
- மனுஷியைக் காணமுடியாதபடி மகிமை மூடியிருந்ததால்: மனிஷியைக் காணவேண்டும் என்ற **கண்களின் இச்சை** சாத்தானுக்கு உண்டானது.
- **மனுஷியுடைய வஸ்திரத்தை விலக்கி துகிலுருந்த சம்பவம்** சாத்தானால் ஏதேனில் முதன்முதலாய் அரங்கேறியது.

**கண்களில் இச்சை ஏதேனில் உண்டானது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) (ஏவாள்) இவள் மனுஷனில் இருந்து எடுக்கப்பட்டபடியால் மனுஷி எனப்படுவாள். ஆகவேதான் இவள் என்எலும்பில் எலும்பும்: என் மாமிசத்தில் மாமிசமும் என்றான் ஆதாம்.

- ஏவாள் பழத்தை உண்டபோது **தேவமகிமை விலகியது**
- ஏவாளுடைய **நிர்வாணம் தெரிந்தது**
- **அந்நியனுடைய மனைவியின் நிர்வாணத்தை** முதன்முதலில் பார்த்தவன் சாத்தானே ஆவான்.
- முதலாவது விபச்சாரம் ஏதேனில் நடந்தது. (மத் 5:28)

**மாமிசத்தின் இச்சை ஏதேனில் உண்டானது.**

## II

(இப்பகுதிக்குள் ஏதேன் தோட்டத்தில் பாவம் நுழைந்தமை குறித்து உண்டாகும் கேள்விக்கணைக்கு முடிந்தவரை பதிலளிக்கப்பட்டுள்ளது)

(அ) **ஏவாள் பழத்தைச் சாப்பிட்டபோது**

- தேவமகிமை விலகியது
- ஏவாள் நிர்வாணியானாள்.
- சாத்தான் ஏவாளின் நிர்வாணத்தைக்கண்டான்.

**ஆனால்:**

ஆதாம், **தேவசாயலும் தேவமகிமையுமாயிருந்தபடியால்**

❖ **ஆதாம், ஏவாளுடைய நிர்வாணத்தைக் காணமுடியவில்லை**

ஆகவேதான்: **ஏவாள் பழத்தைக் கொடுத்தபோது**
**ஆதாம் பழத்தையும் புசித்தான்.**

(ஆ) ஆதாம் - ஏவாள் பாவம் செய்தபோது

- ஆவியிலே ⟶ மரணம் ⟶ ஆவியானவர் விலகினார்
- ஆத்துமாவிலே ⟶ மரணம் ⟶ குமாரனானவர் விலகினார்
- சரீரத்திலே ⟶ மரணம் ⟶ பிதாவானவர் விலகினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தேவசாயலும் - தேவமகிமையும் விலகி நிர்வாணியானார்கள்
❖ பாவமாமிசத்தின் சாயல் வெளிப்பட்டது
❖ இது மண்ணின் சாயல்

(இ) • விபச்சாரம் செய்வது பாவம் என்பது கட்டளையாயிற்று
• யாருடன் உறவுகொள்ள வேண்டும் என்ற ஒழுக்கநெறி உருவாயிற்று
• பெண்ணை இச்சையுடன் பார்ப்பதே விபச்சாரம் செய்தாயிற்று புது உடன்படிக்கை கொடுக்கப்பட்டது.

❖ **(விழுந்து போனவர்கள், மனிதனுக்குள் வாசம்பண்ணி இச்சைகளை நிறைவேற்றமுடியும் என்ற மறைவான காரியம் உண்டு)**

(ஈ) • பெண்தெய்வ வழிபாடு - தோற்றம் பெற்றது.
• பரலோகத்தின் பெண்தேவதைகள் என்ற மதப்போதனைகள் தோற்றம் பெற்றது.
• சொர்க்கத்தில் அழகியபெண்கள் பரிசளிக்கப்படுவார்கள் என்ற மாயம்தோற்றம் பெற்றது.

❖ பரிசுத்த வேதாகமமோ இவைகளையெல்லாம்
மறுத்து - வெறுத்து - எதிர்க்கின்றது
இவ்வுபதேசங்கள் வேதாகமத்துக் கட்டளைகள் அல்ல...

• **சாத்தானும் - நோக்கமும்**

இன்றைய கிறிஸ்தவ விசுவாசிகள் தெரிந்துகொள்ள வேண்டிய காரியங்களிலொன்று சாத்தானுடைய நோக்கம் என்னவெண்பதாகும். சாத்தானின் நோக்கத்தையும், திட்டத்தையும் தெரிந்து கொள்ளும் போதுதான் தேவதிட்டத்தின் நோக்கத்தை உணர்ந்து எச்சரிப்படைய முடியும்.

வேதத்தில் பிரியமாகியிருந்து - ஆராய்ந்து தியானிக்கும் போதுதான் சாத்தானுடைய காரியங்கள் மறைபொருளாயும் குறியீடுகளாயும் புதைத்துள்ளதைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதுதான் நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கும், **தேவனுக்கேற்ற கிரியைகளை** நடப்பிக்க முடியும்.

(i) ஏசாயா *14:12-14*

❖ நான் வானத்திற்கு ஏறுவேன்: தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்.

❖ வட புறத்திலுள்ள ஆராதனைக் கூடத்தின் பர்வதத்தில் வீற்றிருப்பேன்

❖ நான் மேகங்களுக்கு மேலான உன்னதங்களில் ஏறுவேன் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்.

இவ்வேதவசனங்களை நாம் தெளிவாக ஆராயும் போது.

மிகத்தெளிவாக சாத்தானுடைய நோக்கம் என்னவென்பதனைக் கண்டு கொள்ளலாம்.

(1) **சிங்காசனம்** என்பது ஆளுமை செய்வது என்பதின் குறியீட்டு **அடையாளம்.**
ஆகவே: **தனக்காக ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தி ஆளுகை செய்வது.**

(2) தேவனை ஆராதனை செய்வதற்கு தேவதூதர்கள் இருப்பதுபோல, தன்னை ஆராதனை செய்யும் படியான கூட்டத்தை ஏற்படுத்தி, **தன்னை ஆராதனைக்குரியவனாக்குவது.**

(3) உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று, **தன்னைத் தேவனாக்குவது.**

சாத்தானுடைய இந்த **நோக்கத்தினை தெளிவாகக்கண்டு** கொள்ளும் போது:

(i) இயேசுகிறிஸ்துவை சோதித்த சம்பவத்தையும்,
(மத்தேயு 4:1) (லூக்கா 4:1)

(ii) ஆதியாகமம் 3:14 **சாத்தானுக்கு கொடுத்த சாபத்தையும்** சரியான வேத அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும்.

மேலும்: எசேக்கியேல் 28ம் அதிகாரத்திலும் சாத்தானைக்குறித்த தீர்க்க தரிசனங்களிலும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தேவனாக்குவது என்ற நோக்கம் அறியலாம். (எசேக்கியேல் 28:2) (எசேக்கியேல் 28:6)
அப்போதுதான்
❖ இன்று உலகத்தின் பலவழிபாடுகளின் உண்மை புரியும்.
❖ சாத்தானுடைய வீழ்ச்சியின் காரியம் புரியும்.

- **சர்ப்பமும் - சாபமும்**

சாத்தானுடைய நோக்கம் என்னவென்பதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளும் போதுதான்:
ஆதியாகமம் 3:14ல் சர்ப்பத்திற்கான சாபத்தின் பின்னணியை தெளிவாகவும்: சாபத்தின் அர்த்தத்தை முழுமையாகவும் புரிந்து கொள்ள முடியும்.
இல்லாவிடில், இன்னும் விவாதப் பொருளாகவே இருக்கும்.

**ஆதியாகமம் 3:14ல்** தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்துச் சொல்லிய மூன்று சாபத்தைக் காணலாம்.
1. சகல நாட்டு மிருகங்களிலும், சகல காட்டுமிருகங்களிலும் நீ **சபிக்கப்பட்டிருப்பாய்.**
2. உன் **வயிற்றினால் நகருவாய்**
3. **உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத்தின்பாய்**

என்று சாபமிடுவதைக் காணலாம்.

❖ இங்கு சொல்லப்பட்ட சாபம் **சர்ப்பத்திற்கல்ல, சாத்தானுக்கே ஆகும்.** ஏனெனில்
**சர்ப்பத்தின் வடிவில் வந்தவன் சாத்தானே!**

❖ விழுந்து போனதூதனாகையினால் **ஒளியின் வடிவத்தை தந்திர மாக்கினான்.**

## சாபங்களுக்கான விளக்கம்

❖ சாபம் - 1
(i) சகலநாட்டு மிருகங்களிலும், சகல காட்டுமிருகங்களிலும் நீ சபிக்கப்பட்டிருப்பாய் என்பதன் அர்த்தமானது,
- சாத்தானை இழிவுபடுத்துவதற்காக சொல்லப்பட்ட சாபமாகும். மிருகங்களைவிட நீ இழிவானவன் என்பதே அர்த்தமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் தேவன் கேரூபை சிருஷ்டித்தபோது அவன் ஞான வானாக இருந்தான். தானியேலைப்பார்க்கிலும் ஞானவான். இரகசியமான தொன்று அவனுக்கு மறைபொருளாய் இருந்ததில்லை. எசேக்கியேல் **28ம் அதிகாரத்தில்** அவன் ஞானவான் என்பதாய் ஆறுதடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.
(எசே 28:3) (எசே 28:4) (எசே 28:5) (எசே 28:7) (எசே 28:12) (எசே 28:17)

**தன் ஞானத்தை கெடுத்ததினால்** ஆகாதவனென்று தள்ளிவிடப்பட்டவன் **இப்பொழுதும்** ஆதாம் - ஏவாளை வஞ்சித்தபடியினால், நீ நாட்டு மிருகங்களிலும் காட்டுமிருகங்களிலும் **சபிக்கப்பட்டவன்** என்பது அர்த்தமாகும்.

❖ **ஞானவான் ஐந்தறிவு மிருகங்களைவிட கீழானவன் ஆனான்.**

(ii) சாத்தான் தன்னை ஜனங்கள் ஆராதிக்க வேண்டும் என்னும் நோக்கம் உள்ளவன்.

- ஆதாம் - ஏவாளை வஞ்சித்து தன்னை ஆராதிக்கும்படியான சந்ததிக்கு வித்திட்டான்.

- சாத்தான் அக்கினி கற்களினால் உருவாக்கப்பட்டபடியால், தள்ளி விடப்பட்டபின் ஒளியில்லாத ஆராதனையான கல்லின் வழிபாடு விக்கிர ஆராதனையாக மாறிவிடும் என்பதை அறிந்து, **விக்கிர ஆராதனை** செய்யக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டது. ஆகவேதான்: விக்கிரகங்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்று வேதாகமம் எச்சரிக்கின்றது.
(ஏரேமியா 10:15) (ஏரோமியா 51:17-18)

**விக்கிரகங்களுக்குள் கிரியை செய்யும் சாத்தானே!**
**உன்னைநாட்டு மிருகங்களும், காட்டுமிருகங்களும் சுமக்கும் என்பதே முதலாவது சாபத்தின் இன்னொரு அர்த்தமாகும்.**

**தேவனை அறியாத ஜனங்கள் மிருகங்களுக்குமேல் தங்கள் தெய்வங்களை வைத்து சுமப்பதாய் நினைக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலே,

- மிருகங்கள் அவர்கள் தெய்வங்களைச் சுமக்கின்றது (ஏசாயா 46:1)
- ஜனங்களோ மிருகங்களை சுமக்கிறார்கள்.

**சாபம் 2**

உன் வயிற்றினால் நகருவாய்

(i) வயிற்றினால் நகருதல் என்பது பரலோகத்தின் ஆசீர்வாதங்களின் பங்கில்லாது பூமிக்குரிய காரியங்களில் **மாத்திரம்** பங்குள்ளநிலை.

ஆகவேதான், **இம்மைக்காக மாத்திரம்** நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை யுள்ளவர்களாயிருந்தால், எல்லாமனுஷரைப் பார்க்கிலும் **பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்.** (1கொரி 15:9) என்ற எச்சரிப்பைக் காணலாம்.

**இது உலகக்கவலைக்கான நிலை.**

(ii) வயிற்றினால் நகருதல் என்பது **வயிற்றின் போஜனத்திற்கான** கவலை **தேவனைத்தேடாதவர்களுக்கு உண்டாகும் கவலையாகும்.** என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுத்துவோம் என்று சரீரத்திற்கான கவலையின் அடையாளம். புதிய ஏற்பாட்டிலும் **வயிற்றுக்கான ஊழியம், வயிறு தேவன்** என்பவைகள் (பிலி 3:19) (ரோமர் 16:18) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**இது சரீரத்திற்காக கவலைப்படும் நிலை**

**சாபம் 3**

உயிரோடிருக்கும் நாளெல்லாம் **மண்ணைத்தின்பாய்**

**உயிரோடிருக்கும் நாளெல்லாம் சர்ப்பம் மண்ணைத்தின்னுகின்றதா?** என்பது கிறிஸ்தவத்திற்கும் - பரிசுத்த வேதாகமத்திற்கும் எதிராக கேட்கப்படும் கேள்விகளின் **இதுவும் ஒன்று.**

**மண்ணைத்தின்பாய்** என்பது சர்ப்பத்தின் வடிவில்வந்த **சாத்தானுக்குச் சொல்லப்பட்டது** என்பதை அறியாததினால் உண்டான **அறியாமையே காரணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்ணைத்தின்பாய்** என்பது **தோல்வியைதழுவுதல்** என்பதைக்குறிக்கும் சொல்லாகும்.

**சாத்தானுடைய திட்டங்கள் - போதனைகள் - செயல்கள் தோல்வியையே தழுவும் என்பதே செய்தியாகும்.**

இதனை நம்முடைய **பேச்சுவழக்குமொழியில் மண்ணைக்கவ்வுதல்** என்று சொல்வதுண்டு.

## வேதாகமத்திலும் ஆதாரமுண்டு.

(i) வனாந்தரத்தார் அவருக்கு முன்பாக குனிந்து வணங்குவார்கள். அவருடைய சத்துருக்கள் **மண்ணைநக்குவார்கள்.** (சங்கீதம் 72:9)

(ii) (புறஜாதியார்) **பாம்பைப்போல மண்ணை நக்குவார்கள்.** (மீகா 7:17)

சாத்தானுடைய நோக்கங்களும் திட்டங்களும் உண்டாகும் என்பதை அறிந்து அதற்கெதிராகச் சொல்லப்பட்ட சாபம் என்பதை அறிந்து தெளிவடையும் போது, **சந்தேகங்களும் தர்க்கங்களும் தகர்ந்துபோகும்.**

ஆதி 3:14ல் சொல்லப்பட்ட **மூன்று சாபங்களும்** சாத்தானுக்கானவையாக இருப்பதுபோல:

**ஆதி 3:15ல்** சொல்லப்பட்ட பகை, **தேவனுடைய பிள்ளைகளுக்கும் - சாத்தானுக்குமானது** என்பதையும் அறியவேண்டும்.

(i) உனக்கும் - ஸ்திரிக்கும் பகை

(ii) உன்வித்துக்கும் - அவள்வித்திற்கும்; இடையேயானபகை.

(i) உனக்கும் - ஸ்திரிக்கும் என்பது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட **இஸ்ரவேலருக்கும், புறஜாதிகளுக்குமானது** ஆகும்.
**பழைய ஏற்பாடு முழுவதும்** இஸ்ரவேலருக்கும், புறஜாதிகளுக்குமான யுத்தங்களையும், போராட்டங்களையும் காணலாம்.
- **இது பழைய ஏற்பாட்டு பிரமாணம்.**

(ii) **உன்வித்துக்கும் அவள்வித்துக்கும் பகை:**
இங்கு புதியஏற்பாட்டில் ஸ்திரியின் வித்தாக வெளிப்பட்டவர் இயேசுகிறிஸ்துவே ஆவார். (ஏசாயா 65:9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஏற்பாட்டில் புறஜாதிகளும் சுவிஷேசத்தினாலே கிறிஸ்துவின் சிலுவைக்கு சமீபமாகி, விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளை களாவார்கள்.

ஆகவே,

**இது இஸ்ரவேலருக்கும் - புறஜாதிகளுக்குமான பகையல்ல.**

- ❖ இது இயேசுகிறிஸ்துவின் கட்டளையை **கைக்கொள்ளுகிறவர்களுக்கும் கட்டளையைக் கைக் கொள்ளாதவர்களுக்குமான பகை.**
- ❖ இது **மனம் திரும்பியவர்களுக்கும், மதம் மாறியவர்களுக்குமான பகை.**
- ❖ இது **புதிய ஏற்பாட்டுப் பிரமாணம்.**

- **சர்ப்பமும் - வழிபாடும்.**

**கடவுள் என்ற வரைவிலக்கணத்திற்கு** அப்பாற்பட்டதே சர்ப்பத்தின் வழிபாடு ஆகும்.

அன்றுமுதல் இன்றுவரையாக நடைபெறும் இச்சர்ப்பத்தின் வழிபா டானது விழுந்து போன தூதனுடன் தொடர்புள்ளதினால், இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகின்றது.

(i) கேரூப் (Ke-ru-bim) - சேராபீம் (Se-ra-pim) என்பவர்கள் பரலோகத்தில் **காப்பாற்றுகிறதற்காக** அபிஷேகத்தினால் பிரித்தெடுக் கப்பட்டதை வேதாகமம் குறிப்பிடுகிறது. (எசே 28:14)

அவ்வாறே:

பாபிலோனிய - எகிப்திய வழிபாடுகளில் **சிங்காசனத்தை சுற்றி** பாதுகாப்பு அழிப்பதாகவும்;

புராதன **செல்வங்கள் - புதையல்கள் - பொக்கிஷங்கள்** போன்ற வற்றை இவ்வகை (King Cobra) பாம்புகள் பாதுகாப்பதாக புராணக் கதைகளுண்டு.

(ii) கேரூப் - சேராப் எண்பவைகள் **தங்கள் செட்டைகளை** விரிப்பதுபோல King Cobra பாம்பினங்கள் தங்கள் **தலையை விரிக்கும்** தன்மை யுள்ளன. இவைகள் **செட்டைகளின் கீழ் பாதுகாப்பை கொடுப்பது** போன்ற அமைப்பை நினைவுபடுத்துகின்றன. (யாத் 25:19)

எகிப்தின் வழிபாடுகளில் இந்த Cobraக்களுக்கு சிறகுகள் கொடுக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) கேரூப் தன் இருதயத்தின் மேட்டிமை உடையவனாய் (எசே 28:17) இருந்தது போலவே,

King Cobra இனங்கள், தங்கள் இனங்களைவிட **தங்கள் தலையை உயர்த்தி,**

செட்டையை விரிப்பதுபோல **தலையை விரிப்பதினால்** இது மேட்டிமையின் அடையாளம் எனவும்,

**அகங்காரமுள்ளவைகளுக்கு இராஜா** என்னும் குறியீடாகவும் உள்ளது.

இன்றும் இச்சர்ப்பத்தின் வழிபாடானது நமது நாட்டிலும் தொடர்வதைக்காணலாம்.

❖ இன்றைக்குப் பலமக்களால் வழிபடப்படும் பாம்பு இனம் ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட பாம்பு இனம் அல்ல.

❖ இன்றைக்கு வழிபடப்படும் பாம்பு பால்குடிப்பதில்லை.

(இது சினிமாக்களால் காட்டப்படும் மாயம், சினிமாவில் பாலுக்குள் கருவாட்டுத் தூளைக் கரைக்கும் போது, கருவாட்டின் வாசனைக்காக பாம்பு பால் வார்த்த பாத்திரத்தில் தலையைவைக்கும்;
பின்னர் வெறும் பாத்திரம் காட்டப்படும்; இவ்விரண்டு காட்சிகளையும் இணைத்து பாம்பு பால் குடிப்பது போல காட்டப்படும் சினிமாவின்மாயையில் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் **இதுவே நிஜம்**)

❖ இன்றைக்குப் பலமக்களால் வழிபடப்படும் பாம்பு ராஜாவாக இருந்ததில்லை. எங்கே? எப்பொழுது? ராஜாவாக இருந்தேன் என்பது பாம்புக்கே தெரியாது
ஆனால், பாம்பு ராஜாவாக இருந்த உண்மை சாத்தானுக்குத் தெரியும். வேதாகமத்தை ஆராய்பவருக்கும் புரியும்.

ஆகவே, இன்றைக்கு வழிபடப்படும் சர்ப்பத்தின் வழிபாடென்பது, விழுந்துபோன தூதனுடைய சிந்தனையினால் உண்டானதே.
அவ்வாறு இன்று வழிபடப்படும் **பாம்பின் சுபாவத்தை** ஆராயும்போது விழுந்துபோன தூதனாகிய **சாத்தானுடைய சுபாவம்** இருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) **மரணம்**

- பாம்பு தீண்டினால் உடலில் விஷம் ஏறிமரணம் உண்டாகும்.
- **தந்திரமான வார்த்தைகளினால்** பாவத்தில் விழப்பண்ணி, பாவத்தின் சம்பளமாகிய **மரணத்தை ஏற்படுத்துவான்.** (ரோமர் 6:23) (மத்23:15)
- **பாவம்** என்பது **தேவசித்தம்** நிறைவேறாது தடைசெய்வது ஆகும். (சங் 140:3)

(2) **இசையில் பிரியம்**

- பாம்பிற்கு செவி இல்லாவிட்டாலும் **இசை ஒலி அதிர்வினை** உணர்ந்து, உள் உணர்ச்சியை வெளிப்படுத்தும்.
- சாத்தானுக்காக வாத்திய முழக்கம் (ஏசாயா 14:11), மேள வாத்தியங்கள், நாதசுரங்கள் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தன. (எசே 28:14)
- இன்றைக்கு **இசைப்பைத்தியமான கிறிஸ்தவ உலகம்** உருவாக்கப் பட்டுள்ளது.

(3) **இசையும் - நடனமும்**

- பாம்பின் இசையின் நடனம் இருவகைகாரணங்களாகும்.

(i) பெண்பாம்புகளை வயப்படுத்துவதற்காக தன் உணர்வினை வெளிப்படுத்தும் அசைவைக் கொண்டது.

(ii) இசையில் நடனம் என்பது வேடிக்கைப் பொருளாக வெளிப் படுத்தி நிற்பதும், பணம் சம்பாதிக்கும் தொழிலுமாயிற்று.

- இன்றைக்கு சபைகளுக்குள்ளும் இத்தகைய காரியங்கள் இருவகையாகும்.

(i) **பக்தியுடன் இருதயத்தில் உணர்ந்து பாடப்படவேண்டிய பாடல்கள்;** இசையில் உணர்ச்சிகளைத்தூண்டி வாலிப உள்ளங்களை வழிவிலகச் செய்கின்றது.

(ii) கிறிஸ்தவ ஆராதனைகள் பல வேடிக்கைப் பொருளாய் மாறிப்போனது மாத்திரமல்ல, CD, தொலைக்காட்சிகளில் விற்பனை பொருளாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **இது ஆத்தும ஆதாயத்திற்கு உதவாது.**

(4) உறைவிடம்

- பாம்பு கறையானின் புற்றில் குடியிருக்கும்.
- தேவன் தமக்காக படைத்த மண்ணான சரீரத்தில் அசுத்த ஆவியாகக் குடியேறுவான். (மத்தேயு 12:43-45) (மாற்கு 1:26) (லூக்கா 4:33)

(5) வழிகள்

- பாம்பினுடைய வழிகள் கோணலானவை
- சாத்தானுடைய வழிகளும் கோணலானவைகளும், மாறுபாடுள்ளதும் ஆகும்.

❖ ஆகவேதான், கோணலும் மாறுபாடுமான சந்ததி நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களுமாயிருக்கும்படி வேதாகமம் அறிவூட்டுகின்றது. (பிலி 2:15)

(6) ஆசீர்வாதம்

- சர்ப்பமானது **தலைமுதல் வால்** வரை மண்ணுடனே ஒட்டியிருக்கும் தன்மையும்,
  மண்ணுடனே ஊர்ந்து செல்லும் தன்மையும் உள்ளது.
- சாத்தானும் **பூமிக்குரிய ஆசீர்வாதங்களில்** மாத்திரம் ஜனங்களை சிந்திக்க தூண்டுவான்.

❖ ஆகவேதான்; **இம்மைக்காகமாத்திரம்** நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் **பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்** என்பதை (1கொரி 15:19) வேதாகமம் வலியுறுத்துவதைக்காணலாம்.

ஆகவே:

மிகவும் எளிமையான காரியங்கள் மாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இன்னும் **ஆழமான காரியங்களை** எழுதினால் தவறாகப்பயன்படுத்தப்பட்டு விடும் என்பதற்காகவே **தவிர்க்கப்பட்டுள்ளது.**

ஏனெனில், நம்முடைய காரியங்கள் மற்றவர்களை **கிறிஸ்துவுக்குள் மனம் திரும்பப்பண்ண வேண்டும்** என்பதே நோக்கமாயிருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவபர்வதத்தில் இருந்தவனே தள்ளுண்டுபோனான்

- இருதயத்தின் மேட்டிமை கீழே விழத்தள்ளிற்று
- பொருளின் பெருக்கம் மேட்டிமையாயிற்று
- மினுக்கு கெடுத்தது.

| இவைகள் இன்றைக்கும் நமக்குப் பாடங்களே |
|---|

❖ நம் ஊழியத்தின் வருடங்களில் பெருமையோ
❖ நம் சபையின் பெருக்கத்தால் பெருமையோ
❖ நம்மை சுற்றி கூட்டம் இருப்பதால் பெருமையோ

- இவைகள் சாத்தானின் சிந்தனையே!

  ஏனெனில்

  சத்தியத்தை அறியாத ஜனங்களும் இப்பெருமையை உடையவர்களே.

- நம் வேதத்தையும் ஊழியத்தையும் ஒப்பிட்டுப்பார்
- நம் வேதத்தையும் உபதேசத்தையும் ஒப்பிட்டுப்பார்
- நம் வேதத்தையும் உன்னையும் ஒப்பிட்டுப்பார்.

❖ **இவைகளே தேவனுடையவழிகள்**
❖ **வருகைக்கு ஆயத்தப்படுத்தும் வழிகள்**

"கர்த்தாவே!
பலரை நரகத்துக்கு வழிநடத்துவதைப் பார்க்கிலும்
சிலரையாவது பரத்துக்கு வழிநடத்த கிருபைதாரும்"

இதுவே நம்நோக்கமாகவும்;
இதுவே நம் ஜெபமாகவும் அமையட்டும்.

ஆமென்!

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# நீதிமான்களின் இரகசியம்

பரிசுத்த வேதாகமமானது வேதாகமத்துத் தேவமனிதர்களை வெவ்வேறு கோணங்களில் நமக்கு அடையாளம் காட்டுகின்றது. அவ்வாறு அடையாளம் காட்டப்படும் தேவமனிதர்களின் பெயர்களின் அடைமொழிகளில் ஒன்று **நீதிமான்கள்** என்பதாகும்.

வேதாகமம் காட்டும் **நீதிமான்களை** வேதாகமத்தின் காலங்களுக்குள் வகைப்படுத்திக் காணும் போதுதான் நீதிமான்கள் யாரென்பதைப்புரிந்து கொண்டும், நீதிமான்கள் என்று அழைக்கப்படுவதின் கருத்தாழங்களைப் புரிந்து கொண்டும் நம்மை நாமே நிதானித்து ஆராய்ந்து அறிய முடியும்.

இங்கு **தேவ கட்டளைகளின் அடிப்படையிலே** வேதாகமத்தினுடைய காலங்களைக் காணலாம்.

- **நீதிமான்களும் - காலங்களும்**

(அ) ஆதாம் முதல் **மோசே** வரையிலான காலம் - **மனச்சாட்சியின் காலம்**
(ரோமர் 5:14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) மோசே முதல் **யோவான் ஸ்நானகன்** வரையிலானகாலம் - **நியாயப்பிரமாணக் காலம்**
(ரோமர் 2:13) (மத் 11:13) (லூக்கா 16:16)

(இ) **இயேசுகிறிஸ்து** முதல் **சபை எடுக்கும் வரையிலானகாலம் - புது உடன்படிக்கையின் காலம்.**
(ரோமர் 4:25) (ரோமர் 8:30) (1கொரி 3:6)

இம் மூன்று காலங்களுக்குள்ளும் நீதிமான்களை வகைப்படுத்தும் போது தான் நீதிமான்களின் சரியான அளவீடுகளைக் கண்டறிய முடியும்.

## (அ) மனச்சாட்சியின் காலம்

தேவன் தமது கட்டளைகளை **எழுதிக்கொடுத்திராதகாலம்** இதுவாகும்.

ஆதாமுடைய ஆத்துமாவிலே தேவன் தனது கட்டளையாகிய **விளக்கை ஏற்றி,** அந்த **வெளிச்சத்தில்** நடக்கும்படியான ஜீவவழியைக் காட்டினார். (நீதி 6:23)
ஆனால்
**வஞ்சகனோ பொய்களை ஊதி, விளக்கை அணைத்துவிட்டான்.**
(நீதி 12:17) (நீதி 14:5) (நீதி 14:25)

ஆதாம் மூலம் தேவனை அறிந்து கட்டளைகளைக் கைக்கொண்ட சந்ததியும் தேவனை விட்டு விலகிய சந்ததியும் தோன்றியது.
மனச்சாட்சியில் உணர்த்தப்பட்டு தேவகட்டளையைக் கிரியையிலே வெளிப்படுத்தியவர்களுள் தேவன் தெரிந்து கொண்டவர்களே,

**மனச்சாட்சியின் காலத்து நீதிமான்கள் ஆவார்கள்.**

- **நீதிமானாகிய ஆபேல் (எபி 11:4) (மத் 23:35)**

(i) ஆதாம் (தகப்பன்) மூலம் தேவனை அறிந்து கொண்டான்.
(ii) தேவன் மேல் விசுவாசம் கொண்டான்.
(iii) மேன்மையான பலியைத் தெரிந்து கொண்டான்.

விசுவாசத்தினாலே மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினதால் **நீதிமானாகிய ஆபேல் என்று அழைக்கப்பட்டான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **நீதிமானாகிய நோவா (ஆதி 6:9) (ஆதி 7:1)**

1) நீதியைப் பிரசங்கித்தவன். (2பேதுரு 2:5)
2) தன் காலத்தில் பிரசங்கித்ததை **வாழ்ந்து காட்டியவன்.**
3) தேவனோடு **சஞ்சரித்தவன்.** (ஆதி 6:9)
4) தேவ எச்சரிப்பைப் **பெற்றவன்.** (எபி 11:7)
5) தன் உத்தமத்தில் **நடக்கின்றவன்.** (ஆதி 6:9) (நீதி 20:7)
6) தன் குடும்பத்தை இரட்சிப்புக்கு **ஆயத்தப்படுத்தியவன்.** (எபி 11:7)
7) தேவனுடைய கட்டளையின்படியெல்லாம் **செய்துமுடித்தவன்.** (ஆதி 6:22)

எனவே; தேவன் நோவாவை நினைத்தருளி ஆசீர்வதித்து உடன்படிக்கை பண்ணினார்.
(ஆதி 8:1) (ஆதி 9:1) (ஆதி 9:12)

**நீதிமானாகிய நோவா என்று அழைக்கப்பட்டான்.**

- **நீதிமானாகிய லோத்து (2பேதுரு 2:8)**

1) அக்கிரமக் காரருக்குள் **வாழ்ந்துகாட்டியவன்.** (2பேதுரு 2:7)
2) காமவிகார நடவடிக்கைகளைக் கண்டு **வருத்தப்பட்டவன்.** (2பேதுரு 2:7)
3) அக்கிரமக் கிரியைகளின் நிமித்தம் இருதயத்தில் **வாதிக்கப்பட்டவன்.** (2பேதுரு 2:8)
4) நீதியுள்ள **இருதயம் உள்ளவன்.** (2பேதுரு 2:8)
5) அக்கிரமத்தை **தடுத்தவன்.** (ஆதி 19:7)
6) தன் கூரை நிழலில் **அடைக்கலம் கொடுப்பவன்** (ஆதி 19:8)
7) அழிவிலிருந்து மீள **அழைப்புவிடுத்தவன்.** (ஆதி 19:14)

எனவே; கர்த்தரின் கண்களில் தயவு பெற்று அழிவிலிருந்து இரட்சிக்கப் படுவதற்கு கர்த்தரிடத்தில் இரக்கமும் பெற்றான்.

**நீதிமானாகிய லோத்து என்று அழைக்கப்பட்டான்.**

❖ ஆபேல் – நோவா – லோத்து என்போர் மனச்சாட்சியின் காலத்து நீதிமான்கள் என்றழைக்கப்பட்ட உதாரணமானவர்களாவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) நியாயப்பிரமாணக் காலம்.

தேவன் தம்முடைய ஜனங்களை மோசேயின் மூலம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி தானே மெய்யான தேவன் என்று உணர்ந்து தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் படிக்குக், கட்டளை களையும், பிரமாணங்களையும் கொடுத்திருந்த காலமாகும்.

இஸ்ரவேலர் **பாவம் என்னவென்பதையும், தாங்கள் பாவிகள்** என்பதையும் உணர்ந்து கொள்ளுவதற்காகவும் **நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.** (ரோமர் 3:20) (ரேமர் 7:7)

எனினும் நியாயப்பிரமாணத்தின் **கிரியைகளினாலே எந்த மனுஷனும்** தேவனிடத்தில் **நீதிமான்களாவதில்லை** என்பதாக வேதாகமம் தெளிவாகக் கூறுகின்றது. (ரோமர் 3:20) (அப் 13:39)

அவ்வாறெனில்;
நியாயப்பிரமாணகாலத்திலும் **நீதிமான்கள்** என்று வேதாகமத்தில் அடை யாளம் காட்டப்பட்ட **இருதேவமனிதர்கள்** குறிப்பிடத்தக்கவர்களாவார்கள்.

(i) **நீதிமானாகிய யோசேப்பு** (மத்தேயு 1:19)
(ii) **நீதிமானாகிய யோசேப்பு** (லூக்கா 23:50)

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் தேவனிடத்தில் நீதிமான்களாவதில்லை என்ற **வேதவாக்கியம் அவமாய்ப் போயிற்றோ?**

இல்லவே... இல்லை
ஏனெனில் **இவர்கள் இருவரும்** நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, **விசுவாசத்தினாலே நீதிமான்கள்** என்று அடையாளம் காட்டப் பட்டார்கள். (ரோமர் 3:28)

இந்த **இரண்டு நீதிமான்களை** குறித்து வேதாகமத்தின் தரவுகளை நாம் காணும்போது, **மிகவும் ஆச்சரியமான காரியங்களை** நாம் காணலாம்

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்லாமல் தேவன் தெரிந்து கொண்ட முக்கிய பாத்திரங்களாகவும் விசுவாசத்தின் அடையாளங்களாகவும் இருப்பதைக் குறித்து **மூன்றுகாரியங்கள் மாத்திரமே** இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (i) நீதிமானாகிய யோசேப்பு (மத்தேயு 1:19)

(இவர் இயேசுகிறிஸ்துவின் தாயாகிய மரியாளின் புருஷன்.)

- ❖ தேவதூதனால் செய்திகளைப் பெற்றவர். (மத் 1:20) (மத் 2:20)
- ❖ தேவனால் எச்சரிப்பை பெற்றவர். (மத் 2:22)
- ❖ வேதாகமத்தின் தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி தேவனால் வழிநடத்தப்பட்டவர். (மத் 1:19 – 21) (மத் 2:22 – 23)

## (ii) நீதிமானாகிய யோசேப்பு. (லூக்கா 23:50)

(இவர் அரிமத்தியா ஊரைச் சேர்ந்தவர்.)

- ❖ தேவனுடைய ராஜ்யத்துக்காகக் காத்திருந்தவர். (லூக்கா 23:51)
- ❖ யூதருடைய ஆலோசனைக்கும், செய்கைக்கும் சம்மதியாதவர். (லூக்கா 23:51)
- ❖ இயேசுகிறிஸ்துவின் அந்தரங்க சீஷன். (மத் 27:57) (யோவான் 19:38)

- சுபாவத்தின்படி யூதராகிய இவர்கள் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படுதில்லை என்பதன் எடுத்துக்காட்டு.
- கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள்
- நியாயப்பிரமாண காலத்து நீதிமான்கள்.

| (i) நீதிமான் யோசேப்பு (மத் 1:19) | (ii) நீதிமான் யோசேப்பு (லூக்கா 23:50) |
|---|---|
| (அ) இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்று அட்டவணையில் இடம் பெற்றவர். (மத் 1:16) (லூக்கா 3:23) | (அ) இயேசுகிறிஸ்துவின் நான்கு சுவிஷேச நூல்களிலும் இடம் பெற்றவர். (மத் 27:56) (மத் 15:43) (லூக் 23:50) (யோவா 19:38) |
| (ஆ) இயேசுகிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேற வழிநடத்தப்பட்டவர். (மத் 1:20 – 21) (மத் 2:22 – 23) | (ஆ) தேவராஜ்யம் வரக் காத்திருந்தவர். (மாற்கு 14:42) (லூக்கா 23:51) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (இ) இயேசுகிறிஸ்துவின் பிறப்பில் தொடர்புபட்டவர். (மத் 1:16) (லூக் 3:23) | (இ) இயேசுகிறிஸ்துவின் இறப்பில் தொடர்புபட்டவர். (இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணுவதில்) (மத் 27:58 – 60) (மாற் 15:43 – 46) (லூக் 23:50 – 53) |

இயேசுகிறிஸ்துவுடைய வாழ்க்கையில் இடம்பெற்ற இவர்கள் **நீதிமான்கள் என்ற இரகசியத்தின்** முக்கியமானவர்களாவார்கள்.

❖ இயேசுகிறிஸ்துவின் **பிறப்புடன்** ஒருவரும் இயேசுகிறிஸ்துவின் **இறப்புடன்** ஒருவரும் இணைந்திருப்பதும் ஆச்சரியமாகும்.

## (ஃ) புதுஉடன்படிக்கை காலம்.

சுபாவத்தின்படி யூதராயிருக்கிறவர்களும் **விசுவாசத்தினாலே** நீதிமான்களாவதற்கு நியாயப்பிரமாணம் கிறிஸ்துவிடத்தில் வழிநடத்தியது போல் புறஜாதிகளும் **சுவிஷேசத்தினாலே** இயேசுகிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்படும் காலம் **புதுஉடன்படிக்கையின் காலம்** ஆகும்.

புதுஉடன்படிக்கையின் காலத்து நீதிமான்கள் என்னும் பொழுது **இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நீதிமான்** என்று பாடிக் கொண்டும் அதே இடத்தில் நிற்பதும், நம்மை இன்னும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கத் தூண்டுகின்ற காரியமாகவேயுள்ளது.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்படும் பொழுது,

❖ நீதிமான்கள் (ரோமர் 5:1)
❖ இராஜாக்கள் (வெளி 1:6)
❖ ஆசாரியர்கள் (வெளி 1:6)

என்னும் தகுதியுடையவர்களாகவும் மாறுகின்றோம் என்பதையும், அதற்கான **தகுதியினை நாம் காத்து நடக்க வேண்டும்** என்பதையும் அப்போதுதான் அதற்கான பலன்களை பெற்றுக் கொள்ளும் தகுதியுடையவர்களாக காணப்பட முடியும் என்பதையும் உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில்
❖ விசுவாசத்தினால் நீதிமான்கள் (ரோமர் 5:1) (ரோமர் 1:17)
❖ கிருபையினால் நீதிமான்கள். (தீத்து 3:6) (ரோமர் 3:24)
❖ இயேசுவின் இரத்தத்தினால் நீதிமான்கள். (ரோமர் 5:9)

இவைகளெல்லாம் நம்மைத் தகுதியுள்ளவர்களாக மாற்றும். ஆனால் **தகுதியுள்ளவர்கள்** சோதனைகளில் ஜெயிக்கும் போது மாத்திரமே **தகுதியடைந்தவர்களுக்கான** ஜெயம் கிடைக்கும் என்பதே வேதாகமச் சத்தியம் ஆகும். (சங் 11:5) (எரே 20:12) (லூக்கா 16:15)

பந்தயத்திற்கு நிற்பவர்களெல்லாம் ஜெயிப்பதில்லை
ஆகவேதான்,
❖ நீதிமான் விழுந்து போவான். (நீதி 24:16)
❖ நீதிமான் பின்வாங்கிப் போவான். (எபி 10:38)
❖ நீதிமான் இரட்சிக்கப்படுவது அரிது. (1பேதுரு 4:18)
என்னும் எச்சரிப்பின் சத்தங்கள் நமக்கு உண்டு என்பதை எண்ணிக் கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம்.

- **நீதிமானும் - கனிமரமும்.**

பரிசுத்த வேதாகமத்தில் மனிதன் கனிமரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். (சங் 1:3) (ஏசாயா 61:3) (மத் 7:19)

**ஆதியாகமம்** ஏதேனின் ஜீவவிருட்சம் முதல் **வெளிப்படுத்தல்** ஜீவவிருட்சம் வரை மனிதனுக்கும் மரத்திற்குமான இணைப்பை பல்வேறுவிதங்களில் வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. (இயேசுகிறிஸ்துவும் மரத்துடன் இணைந்துள்ளார்) என்பதும் இரகசியமாகும்.
நீதிமொழிகள் நூலிலே **நீதிமானுடன்** - **கனிமரம்** ஒப்பிடப்பட்டுள்ளது.

- **நீதிமானுடைய வேர். (நீதி 12:3) (நீதி 12:12)**

இங்கு **வேர் என்பது ஆத்துமாவுடன்** தொடர்புள்ளது.
**ஆத்துமாவிலே விசுவாசம் வேரூன்றும்** போதுதான், ஆவியின் கனி வெளிப்படும். வேரூன்றி இருப்பதன் அடையாளம் கனியேயாகும். மரம் கனி கொடுக்காத போது **மரத்தின் வேர்** அருகேதான் கோடாரி வைக்கப்படும். (மத் 3:10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேர் என்பது விசுவாசம், நம்பிக்கையின் அடையாளமாகும்.** விசுவாசமும் நம்பிக்கையும் வேரூன்றும் போதுதான், சோதனைகள் அவனை அசைப்ப தில்லை என்பதையும், நீதிமான் நிலைநிற்பான் என்பதையும் குறிப்பதாகும்.

- **நீதிமானுடைய துளிர் (நீதி 11:28)**

இங்கு **துளிர் என்பது சரீரத்துடன்** தொடர்புள்ளது.

ஆத்துமாவிலே விசுவாசம் வேரூன்றும் போதுதான் துளிர் உண்டாகும். விசுவாசம் கிரியையில் வெளிப்படுத்தப்படுவதன் அடையாளம். ஆகவே தான் கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று வாசிக்கலாம்.

**துளிர் என்பது இளங்கிளை** என்னும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏசாயா 53:2) கிளைகள் செழுமையையும், தளைகள் செழிக்கும் போது துளிர் உண்டாவதும் ஆசீர்வாதத்தின் அடையாளங்கள். குளிர்ச்சியான நிழல், பறவைகளின் கூடு, அடைக்கலம் போன்றவைகள் ஆசீர்வாதம் என்பதின் குறியீடாக நீதிமானுடன் இணைக்கப்பட்டுள்ளது.

- **நீதிமானுடைய கனி. (நீதி 12:12)**

இங்கு **கனி என்பது ஆவியுடன்** தொடர்புள்ளது.

வேரின் ஆழமும்; விருட்சத்தின் செழுமையும் **கனிகளினாலேயே அறியப்படும்.**

ஆதாமுக்குச் சோதனையே கனியிலேதான் உண்டானது. கனி என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு, ஏக்கம் என்றும் கூறலாம். கனிகொடுக்காத மரங்கள் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். (மத் 3:10)

கனி கொடுத்தல் என்பது ஆவிக்குரியவனின் அடையாளம். (கலா 5:22)
கனி கொடுத்தல் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. (உன் 4:16)
கனி கொடுத்தல் என்பது மீந்திருப்பவனின் அடையாளம். (ஏசாயா 37:31)

- **நீதிமானும் - வேதமும்.**

நீதிமானுடைய ஆவி – ஆத்துமா – சரீரம் தேவனுடைய வார்த்தையினால் நிரம்பியிருக்க வேண்டும்.
ஆகவேதான் நீதிமானுடைய ஆவி – ஆத்துமா – சரீரத்துடன் வேதத்தை இணைத்துக் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதம் 37:30 – 31; "நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்."
"அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகள் ஒன்றும் பிசகுவதில்லை."

- **நீதிமானுடைய ஆவி.**

(ஆவி என்பது வார்த்தையுடன் தொடர்புடையது)
(i) நீதிமானுடைய வாய். (சங் 37:30)
(ii) அவனுடைய நாவு. (சங் 37:30)
(iii) மேலும் நீதி 10:11, நீதி 10:20, நீதி 10:31, நீதி 10:32
போன்ற வேத வசனங்கள் ஆவியுடன் தொடர்புடையதாயுள்ளதை காணலாம்.

- **நீதிமானுடைய ஆத்துமா.**

(ஆத்துமா என்பது எண்ணங்கள், யோசனை, சிந்தையுடன் தொடர்புள்ளது.)
(i) வேதம் அவன் இருதயத்தில். (சங் 37:31)
(ii) மேலும் நீதி 12:5, நீதி 10:28
போன்ற வேதவசனங்கள் ஆத்துமாவுடன் தொடர்புடையதாய் காணலாம்

- **நீதிமானுடைய சரீரம்.**

(சரீரம் என்பது கிரியை, செயல், வாழ்க்கையுடன் தொடர்புள்ளது.)
(i) அவன் நடைகள் பிசகுவதில்லை. (சங் 37:31)
(ii) மேலும் நீதி 15:19, நீதி 20:7, நீதி 4:18
போன்ற வேதவசனங்கள் சரீரத்துடன் தொடர்புடையதாய் காணலாம்.

- **நீதிமானும் - தேவனும்.**

பிதாவுடைய சித்தத்தின்படி, **இயேசுகிறிஸ்துவைப்** பற்றும் விசுவாசத்தினால், **ஆவியானவருடைய** பரிசுத்தமாக்குதலினால் நீதிமானாக்கப் படுகின்றான்.

இதன் வேதாகம ஒழுங்கைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னறிவித்தவர்கள்
↓
முன்குறிக்கப்பட்டவர்கள்
↓
தீர்மானிக்கப்பட்டவர்கள்
↓
அழைக்கப்பட்டவர்கள்
↓
தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்
↓
அன்புகூருகிறவர்கள்
↓
நீதிமானாக்கப்பட்டவர்கள்
(ரோமர் 8:27 – 30) (1பேதுரு 1:2) (1கொரி 5:11)

இவ்வேதாகம ஒழுங்குமுறையில் அங்கீகாரம் பெற்றவனே தேவனால் **நீதிமானாக மகிமைப்படுத்தப்படுகின்றான்.** (ரோமர் 8:30) (ரோமர் 8:33)

**இந்த நீதிமானோ!**

❖ **கர்த்தரின் வாசல்வழியாய் பிரவேசித்தவன்.** (சங் 118:20)
❖ **ஜீவபுத்தகத்தில் பெயர் எழுதப்பெற்றவன்.** (சங் 69:20)
❖ **நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவன்.** (லூக்கா 14:14)

இவனுடனோ; **தேவனுடைய இரகசியம் இருக்கும்.** (நீதி 3:32)

ஆகவே; நீதிமான்கள் தேவனுடைய கண்களிலே விலையேறப்பெற்றவர்கள் என்பதையும் **புதிய பூமியை** சுதந்தரிக்கொண்டு என்றென்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள் (சங் 37:29) என்ற மேன்மையானவற்றையும் அறியலாம்.

**கர்த்தாவே! என் விசுவாசம் உம்முடைய அடிச்சுவட்டின் வழிகளிலே என்னை நிறுத்தட்டும்.**
என்பதே நமது ஜெபமாக அமையட்டும்.

ஆமேன்.

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# தர்க்கத்தின் இரகசியம்

பரிசுத்த வேதாகமம் என்பது இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களுக்கு பூமியிலே நடந்து கொள்ளுவதற்காக கொடுக்கப்பட்ட தேவ கட்டளையாகும்.
**"தேவகட்டளையில் நடப்பதே அன்பு"** என்றிருக்க, தேவகட்டளையை மீறி வேதத்தில் சொல்லப்படாதவைகளுக்கும் **மனிதஞானத்திலே நியாயம்** கற்பிக்கப்பட்டு பலசபைகளில் வழிநடத்தப்படும் போது, புறம்பேயிருப்பவர்களுடன் போராட்டம் உண்டாகின்றது.

பரிசுத்த வேதாகமத்திற்கு எதிரான கேள்விகள் எழும்பியபோது, போதகர்களாய் இருந்தவர்கள் கூட விழுந்து போனார்கள். இன்றைக்கு இவர்கள் கிறிஸ்தவத்திற்கு எதிரான அம்புகளாய் எய்யப்படுவதினால், விசுவாசிகளை வேதத்தின் அறிவில் அத்திபாரப்படுத்தி ஊன்றக்கட்ட வேண்டியது அவசியமாகின்றது.
இதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி 1**

மாற்கு *16:17-18* பகுதியில் விசுவாசிக்கிறவர்களால் நடைபெறும் அடையாளங்களாவன... **சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது...**

ஆகவே, நீங்கள் விஷத்தைக் குடித்துக் காட்டுங்கள் என்று கிறிஸ்தவத்திற்கும், தேவ ஊழியர்களுக்கும் எதிராக வைக்கப்படும் சவாலாகும்.

**பதில்**

(அ) மாற்கு *(16:11) (16:13) (16:14)* ஆகிய மூன்று வேதப்பகுதியையும் நாம் காணும் போது,

அங்கு **நம்பவில்லை** என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததைக் கேட்டும் **நம்பாமல் போன சீடர்களின்** அவிசுவாசத்தினாலும், அவர்களுடைய இருதயக் கடினத்தினாலும் சீடர்களைக் கடிந்து கொண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளமாகும்.

மாற்கு *16:20* சீடர்கள் விசுவாசித்து புறப்பட்டுபோய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியையை நடப்பித்து **அவர்களால் நடந்த அடையாளங்களினாலே** வசனத்தை உறுதிப்படுத்தினார். *(அப் 14:3) (ரோமர் 15:18) (லூக்கா 9:19)*

மேலும் மெலித்தாதீவில் **விரியன்பாம்பு** பவுலினுடைய கையைக் கவ்விக்கொண்டு தொங்கியதும், அவன் **ஒரு தீங்கும் அடையாததைக் கண்டு** மெலித்தாதீவார் இவன் தேவன் என்று சொல்லிக் கொண்டதும் பெரிய ஆதாரமான சாட்சியாகும்.
*(அப் 28:3-6) (லூக்கா 9:19)*

ஆகவே, இன்றைக்கு இயேசுகிறிஸ்து **உயிர்த்தெழுந்தார் என்ற விசுவாசத்தின்** அடிப்படையில் சபையும், விசுவாசிகளும், தேவ ஊழியர்களும் எழுப்பப்பட்டிருப்பதால் **இது இவர்களுக்கான கட்டளை அல்ல** என்பதை தெளிவாக அறிய வேண்டும்.

(ஆ) சபையானது, **பரிசுத்த ஆவியானவரால் வரங்கள் மூலம் தமது சித்தப்படி** வழிநடத்தப்படும் காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத அடையாளங்கள் புறஜாதியாருக்கான அடையாளமாகும்.

(இ) **இயேசுகிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாவார்.** இயேசுகிறிஸ்துவுக்கு முன்னால் இத்தகைய சோதனைகள் வைக்கப்பட்ட போது,

- கல்லுகளை அப்பங்களாக்கவில்லை
- பணிந்து கொள்ளவில்லை
- தாழக்குதிக்கவில்லை (லூக்கா 4:12) (மத் 4:1-111)

அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்த இயேசுகிறிஸ்து, இவைகளைச் செய்யவில்லையே, ஏனென்றால் **சாத்தானுக்கு செவி கொடுக்கவில்லை"**

**"தேவசத்தத்திற்கு செவிகொடுத்து வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம்."**

**கேள்வி 2**

லூக்கா 22:3-4 இலும், யோவான் 13:26-27 இலும் **சாத்தான் யூதாசுக்குள்** புகுந்து கொண்டது முரண்பாடாக உள்ளது. சாத்தான் எப்போது யூதாசுக்குள் புகுந்தான்?

**பதில்**

(அ) முதலாவது மனிதன் ஆவி - ஆத்துமா - சரீரம் என்ற மூன்று பகுதியை உடையவன் என்னும் வேதாகமத்து அடிப்படைச் சத்தியத்தை அறியவேண்டும் அப்போதுதான் யூதாசுடைய ஆவி, யூதாசுடைய ஆத்துமா, யூதாசுடைய சரீரம் என்ற தன்மை விளங்கும்.

(ஆ) இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கும் படியான எண்ணத்தை யூதாசுடைய இருதயத்தில் (ஆத்துமா) சாத்தான் உண்டாக்கினான் என்பதே லூக்கா 22:3 இலும், யோவான் 13:2 இலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அப்போது யூதாஸ் பிரதான ஆசாரியாரிடத்திலும் சேனைத் தலைவரிடத்திலும் அவர்கள் பணம் கொடுக்க சம்மதித்தார்கள். சமயம் தேடினான். லூக்கா 22:4-6ல் அவன் எண்ணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வார்த்தையில் (ஆவியில்) வெளிப்படுத்தினான்.

யோவான் 13:27ல் பாஸ்காவை அனுசரித்தபின்னர், தனது எண்ணத்தை செயலில் கிரியை செய்யும்படி சாத்தான் அவனுக்குள் புகுந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே : **இவைகள் முரண்பாடுகள் அல்ல.**
மனிதனுடைய ஆவி - ஆத்துமா - சரீரம் என்பதனை **அறியாததினால்** உண்டாகும் குழப்பமேயாகும்.

**கேள்வி 3**
இயேசுகிறிஸ்து, **என்னைத் தொழுது கொள்ளுங்கள்** என்று சொன்னதுண்டோ?

**பதில்**
**(அ) பிறப்பில் பணிந்தார்கள்**

❖ **மத்தேயு 2:20** - சாஸ்திரிகள் சாஸ்டாங்கமாய் விழுந்து பணிந்தார்கள்

(வீட்டிற்குள் நுழைந்த சாஸ்திரிகள் மரியாளையும், பிள்ளையையும் கண்டு, **பிள்ளையை மட்டுமே** சாஸ்டாங்கமாய் விழுந்து பணிந்தார்கள்)

❖ லூக்கா 2:20 - மேய்ப்பர்கள் துதித்தார்கள்
❖ லூக்கா 2:13 - தேவதூதரும், தேவசேனையும் துதித்தார்கள்.

**(ஆ) ஊழியத்தில் பணிந்தார்கள்**

❖ மத்தேயு 14:33 - **சீஷர்கள் பணிந்து கொண்டார்கள்**
(அவரை யாரென்று கண்டபோது கூட இருந்த சீஷர்கள் பணிந்தார்கள்)

❖ **யோவான் 1:17 - யோவான் செத்தவனைப்போல பாதத்தில் விழுந்தான்**

**(இ) பரலோகத்தில் பணிந்தார்கள்**

❖ வெளிப்படுத்தல் 5:6-8 - நான்கு ஜீவன்கள், 24 மூப்பர்கள் வணக்கமாய் விழுந்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வெளிப்படுத்தல் 7:10-11 - தூதர்கள் - மூப்பர்கள் - நான்கு ஜீவன்கள் முகம் குப்புறவிழுந்து தொழுதார்கள்.

ஆகவே, **இயேசுகிறிஸ்து தொழுது கொள்ளத்தக்கவர்.**

(ஈ) லூக்கா 4:7-8, மத்தேயு 4:9-10 ஆகிய வேதப்பகுதிகளிலே சாத்தான் தன்னை சாஸ்டாங்கமாக விழுந்து பணிந்து கொள்ளும்படி இயேசுகிறிஸ்துவிடம் கூறினான் என்பதைக் காணலாம்.

**இயேசு** : அப்பாலே போ சாத்தானே, **உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை** செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

❖ ஊழியத்தில் சீஷகர் **தொழுது கொண்ட போது அதனை அங்கீகரித்தார். இது அவரை தேவனென்று காட்டும் சாட்சியல்லவா.**

❖ பரலோகத்தில் நான்கு ஜீவன்கள், மூப்பர்கள், தேவதூதர்கள் யாவரும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக விழுந்து வணங்கி னார்கள். (வெளி 5:7-8)

**இது அவரைத் தேவனென்று காட்டும் சாட்சியல்லவா.**

❖ ஆகவே : **கிறிஸ்தவர்களும் அவரைத் தேவனென்று ஆராதிக்கிறார்கள்.**

(தன்னைத் தொழுது கொள்ளும்படி சொல்பவர்கள் எல்லோரும் கடவுள் அல்ல. அவ்வாறெனில், சாத்தானும் - பார்வோனும் கடவுளாகிப் போவார்கள் என்பதையும் உணரவேண்டும்.)

(உ) இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன் என்று வேத வாக்கியங்கள் தெளிவான சாட்சி பகருகின்றன. இது தேவ பக்திக்குரிய இரகசியம்.
(பிலி 2:6-8) (கொலோ 1:15) (1திமோ 3:16)

❖ இயேசுகிறிஸ்து **மாமிசத்தில் வெளிப்பட்டபடியினால்,** தம்மைத் தொழுது கொள்ளும்படி கூறவில்லை.
ஆனால்,
இயேசுகிறிஸ்துவின் பிறப்பு - உயிர்த்தெழுதல் - அற்புதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடையாளங்கள் மூலம், **ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவர்கள்** தொழுது கொள்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வருகையின் போது,
வானோர் - பூதலத்தோர் - பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும். (பிலி 2:10),
கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக்குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். (வெளி 1:7)
**இயேசு தேவனென்று வெளிப்படுவார்.**

சகல ஜனங்களின் மேலுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலும் நீக்கப்படும். (ஏசாயா 25:7-9)

கர்த்தர் பூமியின் மீதெங்கும் இராஜாவாயிருப்பார், அந்நாளில் ஒரேகர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். (சகரியா 14:9)

தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் ஒரே சிங்காசனத்தில் இருப்பார்கள். (வெளி 22:1)

ஆகவே: **இயேசுகிறிஸ்து, துதிக்கப்படத்தக்கவரும் - தொழுது கொள்ளத்தக்கவரும், ஆராதனைக்குரியவரும் ஆவார்.**

**கர்த்தாவே!**
**எங்கள் மனக்கண்களை திறந்ததிற்கு நன்றி**
**உம்மை அறியாத மாமிசக் கண்களையும் திறந்தருளும்.**

இதுவே நம் ஜெபமாக அமையட்டும். அப்படியே ஆகும்.

ஆமென்.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகத் தேவைகளுக்கு : (புத்தகம் விற்பனைக்கு அல்ல)

Bro.Abraham J.Jeevithareben
108A, Mason Avenue
HA 3 5 AR
Harrow
England (U.K)
T.P : 0044 7954416972
0044 7575817148

Pastor Francis Mehendran
Good Shepherd Prayer House
6 F/11, 6th Lane,
Veppankulam,
Vavuniya
T.P : 076 3428914

Rev. Pastor. A. கிறிஸ்டோபர்
A.O.G. Church
மொராயா கொலனி
லிந்துல.
ஹற்றன் வழி
T.P: 052 5674603 /
077 2161401

Pastor. இன்பராஜ்
Good News Prayer Church
கோட்டைக்கல்லாறு - 2,
கல்லாறு. (கி.மா)
T.P: 077 6351595

Bro. M. ஜெயராஜ்
54/14, Music Lane
தாமரைக்கேணி,
மட்டக்களப்பு.
T.P: 071 6252946

Pastor. A.I. Jesunesan
(Living God Church)
34/14, Vanniah's Lane,
Batticaloa.
T.P : 077 5809479

Bro. Boni
14 - சின்ன உப்போடை
மட்டக்களப்பு.
T.P: 077 3075350

Bro. Beni
179, Downs Barn
Boulevarel
MILTON KEYNES
U.K.
T.P: 0044 7850378568



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியற் காலத்துக்
கர்ப்பத்தில் பிறக்கும்
பனிக்குச் சமானமாய்
உம்முடைய யௌவன ஜனம்
உமக்குப்பிறக்கும்
(சங்கீதம் 110: 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org